
www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Nur Für Freundkreis

புதிய சந்தா விபரம்

தனிப்பிரதி - 3 SFr.

ஒருவருடம் - 22 SFr.

ஐரோப்பியநாடுகள் - 25 SFr.

(தபால் செலவு உட்பட)

வாசகர்களே!

விமர்சனங்களையும்

ஆக்கங்களையும்

வரவேற்கிறோம்!

• ஆர்-குழு •

வங்கிக் கணக்கு இல:

SPAR KONTO : 0094- 157146- 60- 1

வங்கி முகவரி : "BüCHER VERKAUF"

SCHWIZERISCHE KREDITANSTALT

SWITZERLAND

---

ஒரு குடிகாரன் விளக்குக் கம்பத்தின் அடியில் முழங்காலிட்டு எதையோ தேடிக் கொண்டிருந்தான். தனது சாவிக் கொத்தை தான் தேடுவதாக வழியில் போனவர்களிடம் அவன் அவ்வப்போது கூறிக் கொண்டான். "அதோ; அங்குதான் விழுந்து விட்டது" என்று இருளடைந்த பிரதேசத்தைச் சுட்டிக்காட்டுவான் அவன். "சாவிக்கொத்து அங்கே விழுந்திருந்தால் விளக்கு கம்பத்தடியில் ஏன் தேடுகிறாய்? என்று யாராவது கேட்டால் அவன் கூறுவான்: வெளிச்சம் இருக்குமிடத்தில் தானே தேடமுடியும் என்று."

- சுமந்தா பனர்ஜி -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதம்



ஏகாதிபத்திய
இராட்சதப் பறவைகள்
எச்சம் பட்டு
எரிகின்ற
மத்திய கிழக்கு!

கொலையும்
விரட்டலும்
கொடுமைகள் புரிய
புகைந்து போனது
நமது நேசம்.

- யதார்த்தினி -

- யுத்த மேகங்கள் வெறிகொண்டு அலைந்த 90 ம் ஆண்டின் வளைகுடா நிகழ்வுகள் 91 இல் யுத்தமாய் வெடித்துள்ளது.
- தொடர்ந்தும் எமது தேசமும் யுத்தத்துள் மூழ்கிச் செல்கிறது.

பனாமாவில் இராணுவ சர்வாதிகாரி நொரேகாவின் கைகளை உடைத்து அமெரிக்கா தனது 'ஜனநாயகத்தை' பனாமிய மக்களுக்கு அருளியதோடு ஆரம்பித்தது 90 ம் ஆண்டு.

குவைத்தை ஆக்கிரமித்த ஈராக் சர்வாதிகாரி சதாம் குசைனின் கொட்டத்தை அடக்குவதாய் அமெரிக்காவின் தலைமையில் 16 நாடுகளை உள்ளடக்கிய கூட்டுப்படையின் ஐ.நா இன் அனுமதியுடன் யுத்தத்தை தொடக்கியுள்ளது '91' இல் !

யுத்தம் ; அதன் ஒவ்வொரு தாக்குதல்களையும் அணு அணுவாய் அனுபவித்துக் கொண்டிருக்கும் தேசத்தின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்கள் அறிவர், யுத்தம் எவ்வளவு கொடூரமானது என்று! இன்று வளைகுடாவுக்குள் மூண்டுள்ள யுத்தத்தை அமெரிக்காவின் உயர் தொழில்நுட்ப யுத்தம் (High Tech War) என்றும் 'பாலைவன புயல் காற்று நடவடிக்கை' (Operation Desert Storm) என்றும் வர்ணிப்பவர்களும் வரவேற்பவர்களும் ஒரு புறம் இருக்க;

இந்த யுத்தத்திற்காய் உலக மக்கள் அச்சம் கொண்டார்களோ அதுவே தனது கோர முகங்களை வெளிக்காட்ட தொடங்கியதைக் கண்டு,

« எண்ணைக்காக ரத்தம் வேண்டாம் (No Blood For Oil) »

« எங்களுக்குத் தேவை : அமைதி, சமாதானம், சுதந்திரம் »

என்ற முழக்கங்களோடு அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் உட்பட பல நாடுகளில் இலட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி யுத்த எதிர்ப்பு ஊர்வலங்களில் குதித்துள்ளனர்.

இந்த வளைகுடா யுத்தம் மிகப்பெரிய பொருளாதார அழிவுகளை மட்டுமல்ல, ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகளின் இயற்கை வளங்களையே நாசமாக்கப் போகிறது என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக இந்த யுத்தம் 3ம் உலக நாட்டு மக்களின் வயிற்றில் நெருப்பை அள்ளிக் கொட்டும் பொருளாதார பின்னடைவுகளை உண்டுபண்ணப் போகிறது.

• • • •

இதற்கிடையில்,

எமது மண்ணில் இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்டிருந்த புதுவருடத்தை ஒட்டிய யுத்தநிறுத்தம் ஒரு பத்து நாட்கள் மட்டுமே நீடித்திருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதுவும் இந்த யுத்த நிறுத்தத்தை புலிகள்தான் முதலில் கோரினார்கள் என்று அரசு அறிவித்தது. புலிகளின் அறிக்கைகளும் இதை உறுதிப்படுத்துவதாகவே இருந்தன. மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் காரணமாகவும் பேச்சுவார்த்தைக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தும் வகையிலும் ஒரு முழுமையான யுத்த நிறுத்தத்தை தாம் விடுப்பதாகவும் அரசும் இதை கடைப்பிடிக்குமாறும் புலிகள் கேட்டிருந்தனர்.

புலிகள் ஆயுதங்களை கீழே போட்டால்தான் நாம் அவர்களுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை செய்வோம் என்றும், அத்தோடு இனிமேல் புலிகளுடன் பேசுவதாயின் அவர்களின் உயர்மட்ட இராணுவ தலைவர் பிரபாகரனுடன்தான் பேச முடியும் என்றும் அரசு அறிவித்தது. அரசு நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டே புலிகள் மீது போடும் நிபந்தனைகளைப் பார்க்கும்போதும், புலிகளே யுத்தநிறுத்தத்தை முதலில் கோரினார்கள் என்ற அடிப்படையிலும் புலிகளின் பக்கம் தற்போது பலவீனமாக இருப்பதாக அரசு கருதுவது தெரிகிறது. ஏனெனில் அரசே இந்த யுத்தநிறுத்தத்தை முறித்துக் கொள்வதில் முனைப்பாக செயற்பட்டுள்ளது; மீண்டும் யுத்தத்தில் (தாக்குதலில்) இறங்கிவிட்டதாகவும் அறிவித்துள்ளது. மேலும் உலக வங்கியின் இலங்கைக்கான பொருளாதார உதவியும் சீனப் பிரதமரின் வருகையும் தமிழ் மக்களை ஒடுக்கும் சிங்கள அரசின் யுத்தத்துக்கு அங்கீகாரம் அளித்தது போலாகும்.

சர்வதேச தொலைத்தொடர்பு சாதனங்களின்

www.tamilarangam.net



கவனம் முழுவதும் வளைகுடாவுக்குள் குவியும் இன்றைய நிலையில் எமது மண்ணின் அவலங்கள் வெளி உலகுக்குத் தெரிய வருவது குறைவாகவே இருக்கும்.

இதற்குள் எமது மண்ணில் பேரினவாத சிங்கள அரசுக்கு எதிராக போராடும் சக்தியாக தன்னை மட்டுமே முன்நிறுத்தி இருக்கும் 'விடுதலை புலிகள்' பற்றி அண்மையில் வெளிவந்துள்ள செய்திகள் தமிழ் மக்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. புலிகள் சர்வதேச போதைப் பொருள் கடத்தல்காரர்களான மெடலின் மஃபியாக்களோடு சேர்ந்து போதைப் பொருள் கடத்தினார்கள்; இஸ்ரேல் மொசாட் உளவுப்படையிடம் இராணுவப் பயிற்சி பெற்றார்கள் என்ற செய்திகளே அவை!

இதை வெறும் கட்டுக்கதை என்று புலிகள் அழித்து விட முடியாது. ஏனெனில் "மோசடிகளின் ஊடே" (By way of Deception) என்ற நூலில் ஆதாரபூர்வமாக வெளிவந்துள்ளது. இந்த நூலை முன்னாள் இஸ்ரேலிய மொசாட் உளவுப்படை அதிகாரி 'விக்டர் ஆஸ்ட்ரோவ்ஸ்கி' எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

• • • •

வளைகுடா யுத்தத்தின் மூலகர்த்தாவான சதாம் குசைன் குவைத்தை ஆக்கிரமித்ததற்கான முதன்மைக் காரணம் ஈராக்கின் உள்நாட்டு பொருளாதார நெருக்கடிகளே. இருப்பினும் இதை மூடிமறைத்து வைக்கப்பட்ட பின்னைய கோரிக்கைகள் உலக முஸ்லிம் மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றதில் வியப்பில்லை.

ஏனெனில் வாழ இடம் இல்லாமல் அண்டவந்த

www.tamilarangam.net



யூதர்களுக்கு இடம் கொடுத்த பாலஸ்தீனியர்களையே சொந்த மண்ணிலிருந்து விரட்டியடித்த இஸ்ரேல் « காசா பகுதியிலிருந்து வெளியேற வேண்டும் » என்ற சதாமின் கோரிக்கை முஸ்லிம் மக்களை மட்டுமல் லாமல் உலகின் ஒடுக்கப்படும் மக்களையும் உலக அனுதாபி களையும் சிந்திக்கவும் உணர்வு பெறவும் தூண்டியுள்ளது.

ஆனால்,

விடுதலைப் புலிகளோ இஸ்ரேலிடம் பயிற்சி பெற்றார்கள், போதைப் பொருள் கடத்தினார்கள் என்ற செய்திகளும் வடக்கு கிழக்கு முஸ்லிம் சகோதரர்கள்மீது நடந்துகொண்ட போக்கும் உணர்த்துவதுதான் என்ன!

# மௌனம்

மௌனித்து விடு!
இல்லையேல்
மரணம் உன்னை
இரவு கொள்ளும்
இருட்டுக்குள்ளே
உறங்கிப் போ!
இந்த வெளிச்சம்
உனக்கு விடிவல்ல
அவை
துப்பாக்கி குண்டுகளின் ஒளி
ஓசை உனக்கு இசையல்ல
அவை
மரணத்தின் ஓலம்!

பாசென்.

www.tamilarangam.net





நன்றி : KIRCHE + VOLK — படம்

# சுவிஸில் : இவர்களின் எதிர்காலம் !

இனி எங்கள் குழந்தைகள்தான் எங்களுடைய எதிர்காலம் இப்படி நினைப்பவர்கள் எமது பெற்றோர்கள். இவர்கள் தமது குழந்தைகளின் நல்வாழ்வுக்காக எத்தகைய துன்பங்களையும், வேதனைகளையும் சுமக்க தயாராக இருப்பவர்கள் ! சுமப்பவர்கள் !

தாம்வாழும் சமூகத்தில் தமது குழந்தைகள் 'உயர்ந்து' வாழ வேண்டும். இதுவே பெற்றோர்களின் விருப்பம். அத்தோடு தம்மால் சாதிக்கமுடியாதவற்றை தமது குழந்தைகள் சாதித்துக்காட்டவேண்டும் என்று ஆசைப்படுபவர்களும் கூட. எப்படியோ தமது குழந்தைகளை நல்ல நிலைக்கு உருவாக்கிவிட வேண்டும் என்பதற்காய் அயராது உழைப்பவர்கள் எமது பெற்றோர்கள்.

வெளிநாடுகளில் குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாய் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் தமது குழந்தைகளின் எதிர்காலம் குறித்து இன்று நிறைய சிந்திக்கின்றனர்.

அன்னிய மண்ணில் அழையா விருந்தாளிகளாய் அகதி வாழ்வு, மாறுபட்ட கலாச்சாரம், வளர்ந்து வரும் நிறவாதம் போன்ற நெருக்கடி நிலமைகளுக்குள் எப்படி எங்கள் குழந்தைகளை வளர்த்தெடுக்கப்போகின்றோம் என்று வேதனைப்படுகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முக்கியமாக பெற்றோர்கள் தமது குழந்தைகளின் கல்வி, கலாச்சாரம் போன்றவற்றில் மிகுந்த அக்கறை காட்டுபவர்கள். இவை இரண்டும் இங்கு இவர்களுக்கு பிரச்சனைக்குரியனவாய் தெரிகின்றன.

இதுபற்றி இங்குள்ள சில பெற்றோர்களின் கருத்துக்களைப் - பார்ப்போம்.

* எமது வாழ்வே இந்த நாட்டில் உறுதியற்றிருக்கும்போது எமது பிள்ளைகள் குறித்து நாம் எப்படி ஒரு சரியான கருத்தை பெற முடியும். ஏதோ இங்கு இருக்கும் வரை அவர்களும் எம்மோடு இருக்கட்டும்! இங்கேயே படிக்கட்டும்.
* எமது குழந்தைகளை இந்தியாவில் வைத்து படிப்பிக்கவே விரும்புகின்றோம். அதற்கான வசதிவாய்ப்பு எமக்கு இல்லையே.
* எம்மைப் பொறுத்தவரை நாம் எங்கு வாழ்ந்தாலும் பரவாயில்லை எமது குழந்தைகளின் படிப்பு எதிர்காலம்தான் முக்கியம். குழந்தைகள் இங்கு டொச்சில் படித்து விட்டு பின்பு ஊருக்கு வந்து என்ன செய்வார்கள் கனடாவுக்கோ, லண்டனுக்கோ அனுப்பி படிப்பிப்பதே நல்லது.

இங்கே குறிப்பிட்டது போன்று, தமது குழந்தைகளின் எதிர்காலம் குறித்து பெற்றோர்கள் பலதிசைகளிலும் கருத்துக்களை உதிரவிட்டு சரியான ஒரு நிலைப்பாட்டை பெறமுடியாது வேதனைப்படுகின்றனர். இவர்களின் வேதனை கூட நியாயமானதுதான்.

உண்மையில் எமது குழந்தைகளின் எதிர்காலம் குறித்து நாம் ஒரு சரியான பார்வையை பெறத்தவறின் அது குழந்தைகளின் எதிர்காலத்திற்கே ஒரு பலவீனமாகிவிடும்.

அதனால் நாம் இன்றைய நிலமைகளில் இது வெறுமனே பெற்றோர்களுக்குரிய பிரச்சனை என்று ஒதுக்கிவிடாமல் எதிர்கால சமூகத்துடைய பிரச்சனை என்ற நோக்கில், எல்லோருக்குமான பொதுப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரச்சனையாகப் பார்ப்போம்.

இங்கு வாழும் தமிழ் குழந்தைகளின் எதிர்காலம் குறித்து பெற்றோர்கள் கொண்டுள்ள கருத்துக்களிலிருந்து மூன்று நிலைப்பாடுகள் தெரிகின்றன.

- குழந்தைகளை இந்தியாவில் வைத்து படிப்பித்தல்.
- ஆங்கிலம் பேசப்படும் நாடுகளுக்கு அனுப்பி படிப்பித்தல்.
- தற்போது வாழும் நாட்டிலேயே குழந்தைகளை படிப்பித்தல்.

இனி, இந்தக் கருத்துக்களை சற்று விரிவாகப் பார்ப்போம்.

**குழந்தைகளை இந்தியாவில் வைத்து படிப்பித்தல்.**

பெற்றோர்களின் இந்த நோக்கத்திற்கு முதலில் முக்கிய அடிப்படையாய் அமைவது கலாச்சாரம். ஏனெனில் அதிகமான பெண்குழந்தைகளைப் பெற்ற பெற்றோர்களே இத்தகைய கருத்தை கொண்டுள்ளனர். இந்தியாவும், இலங்கையும் கலாச்சார பாரம்பரியங்களில் ஒன்றாய் இருக்கின்றன என்பது உண்மையே. ஆயினும் இன்றைய எமது தேசத்தின் யுத்த சூழலில், கலாச்சாரப் பரப்பில் நெகிழ்வுகளுக்கும், மாறுதல்களுக்குமான கூறுகள் அதிகம் தாக்கம் செலுத்தும் வேளையில் நாம் இன்னமும் பாரம்பரிய பண்பாடுகளை அப்படியே பேணிவாழமுடியாது என்பதுதான் நிகழ்வு. அதுமட்டுமல்ல, இன்றைய இங்கை இந்திய கலாச்சாரமே மேற்கத்தய- உள்நாட்டு கலாச்சாரங்களின் கலவையாகக் காணப்படுகின்றது. இத்தகைய பண்புகளூடாக பார்க்கும்போது எமது குழந்தைகளை இந்தியாவில் கலாச்சாரத்தைத்தான் முதன்மைப்படுத்தி வாழவிடுவது என்பது அர்த்தமற்றது. இருப்பினும் ஒரேமொழியென்ற அடிப்படையில் பார்ப்போமாயின் அந்தப் பிணைப்பு இறுக்கமானதுதான். ஆயினும் இந்தியாவில் (தமிழ்நாட்டில்) உயர்நிலைக்கல்லூரிகள் அதிகமாக ஆங்கிலத்தையே போதனா மொழியாகக் கொண்டுள்ளன என்பதையும் நாம் அறிவோம். அதுவும் பெற்றோர்கள் அய்ரோப்பாவில்

www.tamilarangam.net



இருந்துகொண்டு பிள்ளைகளை விடுதிகளில் வைத்து படிப்பிக்கலாம் என்ற போக்கும் உண்டு. பெற்றோர்களில் ஒருவரோ, உறவினர்களோ அங்கு வாழ்வார்களாயின் இது ஒரு வேளை சாத்தியமாகலாம். எவ்வாறாயினும் இந்தியாவில் பிள்ளைகளை வைத்து படிப்பிப்பது பற்றி இன்னும் ஆழமாக சிந்தித்து பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து ஒரு சரியான பார்வையைப் பெறலாம்.

**இரண்டாவதாக, ஆங்கிலம் பேசப்படும் நாடுகளுக்கு அனுப்பிப் படிப்பித்தல்.**

இது, ஆங்கிலேயர் எமது மண்ணை அடிமைப்படுத்தியதின் விளைவாக எமது நாட்டில் இன்னமும் ஆங்கிலத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவமும் ஆங்கிலத்தைக் கற்பதால் சமூக அந்தஸ்து உயர்கிறது என்ற பிரமையிலிருந்து பிறந்த ஒரு நோக்குமாகும். உண்மையில் ஒரு குழந்தை அது எந்த மொழியில் ஆழமாக சிந்திக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளதோ அந்த மொழியில் கல்வி கற்பதே அக்குழந்தை தன் முழுத்திறமைகளையும் வெளிப்படுத்துவதற்கான அதிக வாய்ப்பைக் கொடுக்கிறது. குழந்தை தான் பிறந்ததிலிருந்து வாழ்ந்த சூழலில் எந்தமொழியை முதலில் பேசத்தொடங்கியதோ அம்மொழியில் கல்வி கற்பதே சிறந்தது. அப்படிப்பார்போமாயின் எமது குழந்தைகள் தமிழில்தான் கல்வி கற்கவேண்டும். ஆனால் நிலைமை மாறிவிட்டதே. ஜேர்மன் மொழியை அல்லவா பிள்ளை தான் வாழும் சூழல் முழுதும் கேட்கிறது. வீட்டில் மட்டும்தான் தமிழ், அப்படியெனில் இந்தக் குழந்தையின் நிலைமை எப்படியோ. அடுத்துப் பார்ப்போம்.

**தற்போது வாழும் நாட்டிலேயே குழந்தைகளைப் படிப்பித்தல்.**

எமது சொந்த மண்ணில் வாழமுடியாத நிலையில் இது ஓரளவு சரியான அணுகுமுறை என்றே கருதலாம். இருப்பினும் புறச்சூழலை நாம் நிதானமாக நோக்கவேண்டும். எமது இங்கத்தய அகதிவாழ்வு, நிறவாதம் போன்றவைகள் எமது குழந்தைகளின் மீதும் தாக்கம் செலுத்தத் தொடங்குவது இயல்பானதே!

வகுப்பில் எமது குழந்தைகளோடு சேர்ந்து பயிலும் இந்நாட்டு குழந்தைகள் சிலவேளை தனிப்பட்ட 'குழந்தைத்தனங்களுக்கும்' இனவாத நிறவாத குரலால் எமது குழந்தைகளை அடக்குமுற்படும். இவை சிறிய நிகழ்வுகளாயினும் எமது குழந்தைக-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரின் மனதை பாதிக்கவே செய்யும். உண்மையில் இது அக்குழந்தைகளின் தவறு அல்ல. அந்த குழந்தைகளின் பெற்றோர்கள் சொல்லிக் கொடுத்ததுதான். மேலும் இத்தகைய குழந்தைகள், தமது விளையாட்டு நேரத்திலும் தமது நிற குழந்தைகளை அதிகமாய் சேர்த்துக்கொள்ள விரும்புவதும், தமக்குள் ஆட்கள் போதாதபோது, அல்லது தமக்குள் சண்டை என்கிறபோது மட்டும் எமது குழந்தையை சேர்த்துக்கொள்ளும் தன்மைகளும் எமது குழந்தையின் மனதை பாதிக்கச் செய்யும். ஆசிரியரிடம் முறையிடவும் செய்யும். இது ஆசிரியர்களுக்குக்கூட தர்ம சங்கடமாய் போய்விடும். மேலும் பிள்ளைகளின் வீட்டு பாடங்களில், அனேகமான பள்ளி குழந்தைகளுக்கு தலையிடியாய் இருக்கும். இதற்கு பெற்றோரின் பக்கம் உள்ள குறைபாடுகளே முக்கிய காரணமாகிறது.

* பெற்றோர்களுக்கு இந்நாட்டு மொழியின் மீது போதிய பரிட்சயமில்லாத போது குழந்தையின் சந்தேகங்களைப் போக்கவோ, வீட்டுப்பாடத்திற்கு ஒத்துழைக்கவோ முடியாமல் போகின்றனர்.
* குழந்தையின் படிப்பிற்கு ஒத்துழைப்பதற்கு தமது நேரத்தில் ½ மணி நேரத்தையாவது ஒரு நாளைக்கு செலவிடாத அக்கறையீனம். (குழந்தை தானாக படிக்கும் என்ற நோக்கம்.)
* குழந்தை விடயங்களை, பொருட்களை கூர்ந்து கிரகிக்கும், அவதானிக்கும் அம்சங்களுக்கு ஊக்கம் கொடுக்காமல் தமது வேலை என்ற ஒன்றுக்குள்ளேயே மூழ்குதல்.

இவை போன்ற சகிதமான பெற்றோர்களுக்கே உரித்தான குறைபாடுகள் களையப்பட்டு பிள்ளையின் பள்ளிப் படிப்பிற்கு மட்டுமல்ல பொது அறிவுக்குமான ஊக்குவிப்பையும் கொடுக்கவேண்டும்.

உண்மையில் இங்கத்தைய குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு (சனத்தொகையோடு கணிப்பிடும்போது) இங்கத்தைய கல்விமுறைதான் முக்கிய காரணியாகிறது. ஆகவே குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பினால் மட்டும் போதாது, பிள்ளையின் ஒவ்வொரு நாள் படிப்பிலும் பெற்றோர்கள் அக்கறை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செலுத்தியாக வேண்டும்.

அடுத்து எமது குழந்தைகள் கட்டாயமாக எமது தாய்மொழியை கற்கவேண்டும். அப்போதுதான் பெற்றோருக்கும் குழந்தைக்குமிடையில் (பெற்றோர்களுக்கு இந்நாட்டு மொழியில் பூரணத்துவம் இல்லாதபோது) முழுமையான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள முடியும். அதுமட்டுமல்ல, எமது மண்ணில் மறுபடியும் எமது வாழ்வை மீள் அமைத்துக்கொள்வதற்கும் மொழியொரு பாலம் என்று உணர்வோம்.

ஆகவே எமது குழந்தைகளுக்கு தமிழை கற்பித்துக் கொடுக்க வேண்டும் என்பது தேவையானதும் அவசியமானதும்கூட. இருப்பினும் எப்போது கற்பித்துக் கொடுக்க வேண்டும் என்பது இதற்கும் மேலானது.

குழந்தை இன்று தனது ஆரம்பக்கல்வியை டொச்சில் கற்கத்தொடங்கிறது என்று எடுத்துக்கொண்டால், இந்தப்பருவத்திலேயே பிள்ளைக்கு தமிழையும் கற்றுக்கொடுக்கவேண்டும் என்று சில பெற்றோர்கள் விரும்புகின்றனர். இவர்களின் மொழி மீதான 'உணர்வை' மதிக்கும் அதேவேளை, குழந்தையின் கிரகிக்கும் மனோநிலையையும் நாம் கருத்தில் எடுத்தாக வேண்டும்.

குழந்தை கிரகிக்கவும், சிந்திக்கவும் தொடங்கும் ஆரம்ப கட்டத்தில் முற்றிலும் வேறுபட்ட இருமொழியை கற்பிக்கின்றோம். விளைவு; குழந்தை எழுதும்போது பெரும் குழப்பத்திற்கு உட்படும். அ என்பது தமிழில் உள்ள அ என்ற எழுத்தா அல்லது ஜேர்மன் மொழியிலுள்ள A என்ற எழுத்தா என்று குழப்பத்திற்கு உட்படும் குழந்தைகளை நாம் கண்டிருக்கின்றோம்.

ஆகவே, குழந்தையின் சிந்தனை வளர்ச்சியை கருத்தில் எடுத்து, குழந்தையின் ஆரம்ப கல்விப்பருவத்தில் தமிழை சரளமாய் (உச்சரிப்புக்களை சரியாக) பேசக்கற்பிக்கலாம். அது நாம் வாழும் (சூழல்) மொழியில் முழுமையாக பேச எழுதத் தொடங்கிய பின்பு தமிழை எழுத, படிக்க கற்பிப்பதே சிறந்த வழிமுறையாகும். இதற்கு வயது எல்லைகள் சொல்லிவிட முடியாது. இங்கே குழந்தையின் ஆர்வம் தேவையாகிறது.

www.tamilarangam.net



மேலும் எமது பெற்றோர்கள் தொழில் கல்வியின் பயன்பாட்டை இன்னமும் குறைத்தே மதிப்பிடுகின்றனர். இதுவும் ஆங்கிலேயர் எம் மண்ணில் பதித்துச் சென்றிருக்கும் உத்தியோகக் கல்வியின் (OFFICE WORK) வெளிப்பாடே.

பெரும்பாலான பெற்றோர்கள், தமது குழந்தைகள் டொக்ரராகவோ, எஞ்சினியராகவோ, பேராசிரியராகவோ வரவேண்டுமென்றே விரும்புகின்றனர். இங்கே பிள்ளையின் விருப்பம் அறியப்படவில்லை. பெற்றோர்கள் தமது விருப்பத்தை பிள்ளையை செய்யும்படி நிர்ப்பந்திக்கின்றனர். இவர்களின் இந்த போக்கு பிள்ளையில் இருக்கும் ஆற்றலை, ஆர்வத்தை மழுங்கடிப்பதோடு சிலவேளை பிள்ளையின் எதிர்காலத்தையே நொருக்கிவிடுகிறது.

ஒரு குழந்தைக்கு கலை - இலக்கியத்துறையில் நிறைய ஆர்வம் இருக்கலாம் ஆயினும் பெற்றோர்கள் மருத்துவத்துறையிலோ அல்லது சட்டத்துறையிலோ தம் குழந்தை படித்து பட்டம் பெறவேண்டும் என்று விரும்புவர். விளைவு பின்னர் இரண்டும் கெட்டான் நிலையில்.

இங்கும் கூட சில பெற்றோர்களை சந்திக்கிறோம்.

"என்ர பிள்ளை செக்குண்டர் கூலுக்கு போகவேணும். அதுக்கு போகாட்டி பேந்தென்னத்திற்கு படித்து? சமையல்காரனாகவோ இறைச்சிக்கடைக்காரனாகவோ இருக்கவோ?

இவை பற்றி பெற்றோர்கள் சிந்தித்தாகவேண்டும்.

ஒரு மனிதனை உருவாக்குவதில் அவன் வாழும் சூழலிற்கு அதிக பங்கு இருக்கின்றது. இன்றைய எமது குழந்தைகள் இந்த நாட்டில் வாழும்போது அவர்களும் இங்கத்தைய பண்பாட்டில் வளர்வார்கள் என்பது தெளிவு.

எங்கள் நாடுகளுடன் ஒப்பிடும்போது பொய், களவு இந்த நாட்டில் காண்பது குறைவு. கடினமான உழைப்பாளிகள், தொழிலாளி முதலாளி தங்களுக்குள் பழகிக்கொள்ளும் விதம்......

www.tamilarangam.net



அரசியல் பொருளாதார காரணங்கள் ஆழ வேரூன்றியிருப்பினும் பண்பாடு என்ற நோக்கில் இந்த நல்ல அம்சங்களை எமது குழந்தைகளும் கற்றுக்கொள்வா-ர்கள். மறுபுறம் இங்கத்தைய கலாச்சார சீரழிவுகள், இங்கே மனித உறவுகள் நெருக்-கமாக இருக்கிறதா? இச்சமூகம் எந்நிலையில் இருக்கிறது இவைகளையும் நாம் நோக்க வேண்டும்.

இங்கேதான் எமது பெற்றோர்களுக்கு நிதானம் தேவையாகின்றது. குழந்தைகள் கற்றுக்கொள்ளும் போதே பெற்றோர்களும் இன்னும் நிறையக் கற்றுக் கொள்ளவேண்டும். அப்போதுதான் எமது சமூகத்தை சேர்ந்த ஒரு பிரஜை என்ற உணர்வை ஏற்படுத்தி எமது குழந்தையை வளர்த்தெடுக்கலாம்.

குழப்படியான, சுட்டியான குழந்தைகள் மீது ஊரில் பெற்றோர்கள் கண்டிப்பாக கறாராக இருப்பார்கள். இங்கு இதை ஒரு வகை பொலீஸ்காரன் வேலை என்பார்களே ஒழிய தந்தை பிள்ளை உறவு என்று ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அத்தோடு முக்கியமான இன்னொன்றையும் குறிப்பிடவேண்டும். பிள்ளையின் படிப்பு விடயத்தில் அப்பாவும், பிள்ளையின் உணவு, உடை போன்றவற்றில் அம்மாவும் அக்கறை காட்டுவது என்ற நிலை மாற்றத்துக்குட்பட்டு அப்பாவும், அம்மாவும் பிள்ளையின் எல்லா விடயத்திலும் அக்கறை காட்டவேண்டும் என்பதே அது.

இதற்கு மேலாய் எமது பெற்றோர்கள் தமக்குள் பேசிக்கொள்ளும் இன்-னொரு விடயமும் உண்டு.

அது, எங்கள் குழந்தைகள் இங்கத்தைய வசதிவாய்ப்பில் வாழப்பழகிவிட்டு, எங்கள் தாய்மண்ணில் வந்து வாழ விரும்புவார்களா என்பதே. இதுவும் ஒரு நியாயமான கேள்விதான்.

எமது குழந்தைகளை நாம் வளர்த்தெடுக்கும் முறை-யில் இந்தக்கேள்விக்கான பதிலை தேடமுடியும். குழந்தை வெளிஉலகத்தை அறியத்தலைப்படும்போது, எமது தேசிய சாப்பாடான சோறுமட்டும் கொடுத்தால் போதாது. சோறுடன் எமது சமூகத்தைப்பற்றியும் எமது அகதி வாழ்வுக்கான கார-

[► 17ம் பக்கம்]

www.tamilarangam.net

# மறுப்பு

நான் முன் போக எண்ணினேன்
அவன் தன் கைகளைப் பற்றிச் சொன்னான்.
நான் மறுத்தேன்..........
அவன் சரமாரியாக என் மீது
அடிகளைப் பொழிந்தான்
நான் நிலைகுலைந்து விழுந்தேன்.
எழுந்தேன்.... மீண்டும் நடந்தேன்
அவன் என் முன் நின்று எனது பாதையைத்தடுத்தான்.
மெதுவாக மென்மையாக அவனது கையை நகர்த்தி
முன்னால் சென்றேன்.
அவன் தனது கையைப் பின்னிழுத்து
எனது முகத்தில் அறைந்தான்.
நான் அவனைப் பார்த்தேன்,
கண்களில் கண்ணீருடன்
மீண்டும் நடந்தேன்
தனியாக
அவனால் எனது சுதந்திரத்தைப் பொறுக்கமுடியவில்லை
தனது கரங்களுக்குள் என்னைச் சிறைவைக்கவிரும்பினான்.
தனது முத்தங்களால் காதலால் ஒரு வலை பின்னினான்.
அதை என்மீது வீசினான்
ஆக இந்த பின்னலுக்குள்
எனது ஆன்மா தன் வாழ்வைக் கழிக்கவேண்டும்.

► 17ம் பக்கம்

www.tamilarangam.net



எனது இறக்கைகள் படபடக்க நொச்சடங்கி
உருக்குலைந்து சாக வேண்டும்.
ஆனால் நான் இதிலிருந்தும் தப்பிக்கொண்டேன்.
நானிந்த மாயையிலிருந்து மீளுமுன்
அவனென்னைப் புதை மனசுக்குள் தள்ளினான்.
குஞ்சுச்சாட்டுக்களை அள்ளி வீசினான்;
அவன் எதிர்பார்த்தான்
எனது தோல்வியை ஒத்துக்கொள்வேன் என்று;
அவனது ஆண்மையை,
அதன் உலகளாவிய பலத்தை ஏற்றுக் கொள்வேன் என்று
ஆனால் நான் மறுத்தேன்
மறுத்தேன்
மறுத்தேன்.

- MANUSCHI இதழிலிருந்து -
தமிழில் - தேவா

---

[◄ 15ம் பக்கம்]

ளங்களையும் சேர்த்து குழைத்து பிள்ளை 'ஜீரணிக்கக் கூடியதாக கொடுத்து வரவேண்டும். எமது மொழியையும் கற்றுக்கொடுத்திடவேண்டும்.

இப்படியாக பொறுப்புணர்வு கொண்ட பெற்றோர்களாக 'இலங்கைத்தமிழ் அகதிகளாக' நாம் வாழத்தொடங்கும்போது எமது குழந்தைகளும் எமது குழந்தைகளாக வளர்ந்து வருவர். ▌ச.தீபன்▌

சிக்கலாயிருக்கும் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து ஒவ்வொரு பெற்றோரும் சிந்திக்கும் இக்காலகட்டத்தில் அதற்கான தீர்வை நோக்கிய தேடல்களின் நிமித்தம் இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது. வாசகர்களிடமிருந்து கருத்துக்களை எதிர்பார்க்கிறோம்.

www.tamilarangam.net


# தமிழ்த்தேசிய இனத்துள் குறுந்தேசிய வாதம்

சென்ற இதழில்: தமிழரசுக்கட்சியின் போராட்ட நடவடிக்கைகளையும் அவற்றில், அதன் தவறுகளையும், அவர்களின் சந்தர்ப்ப வாதத்தையும் தமிழ் மக்களிடம் இனவாதக் கருத்தை விதைத்து கூட்டணியாகப் பரிணமித்ததையும் பார்த்தோம். -குகன்-

1977 ம் ஆண்டு தேர்தலை தமிழர் விடுதலை கூட்டணி 'தமிழ் ஈழத்திற்கான' தேர்தலாக்கியதுடன் அதில் எதிர்பார்த்த (பாராளுமன்ற) வெற்றியையும் பெற்றது. ஆனால் கடந்த காலங்களைப்போல் பாராளுமன்ற சுகபோக அரசியலை தொடர்ந்து நடத்தமுடியாமல் போய்விட்டது.

77 ம் ஆண்டு இனக்கலவரத்தை அடுத்து தமிழீழம் பற்றிய பேச்சுக்கள், வெள்வெருட்டு நடவடிக்கைகள் போன்றவற்றைக் கைவிட்டு வழமைபோல் UNP யுடன் சமரசப் பேச்சுக்களில் ஈடுபட்டு இனப்பிரச்சினைக்கு 'தீர்வு காண' முற்பட்டனர். மாவட்ட சபைகளை ஏற்றுக்கொண்டு அதன் அதிகாரப் பங்கீட்டிலும் பங்கெடுத்தனர். இக் காலப்பகுதியில் த.வி.கூ இனால் இவைகளைத் தவிர வேறெதையும் சாதிக்க முடியாமல் போய்விட்டது. இப் போக்கின் மூலம் கூட்டணித் தலைமை தனது கையாலாகாத்தனத்தை முற்றுமுழுதாக தமிழ் மக்களிடம் அம்பலப்படுத்திக் காட்டுகிறது. இந்நிலையில் கூட்டணியில் இருந்து உதித்த தீவிரவாத இளைஞர் இயக்கங்கள் கூட்டணிக்கு மாற்று சக்தியாக எழுந்தன.

தமிழ் மக்கள் மத்தியில் வளர்க்கப்பட்ட அரசியலில் தமிழ்மொழி உணர்வை மூலாதாரமாகக் கொண்ட தமிழரசுக் கட்சியாலும் கூட்டணியாலும் செல்லப்பிள்ளைகளாக வளர்க்

www.tamilarangam.net



கப்பட்ட இவ் இளைஞர் இயக்கங்கள் '83' இனவாத வன்முறைக்கு முன்னர், வட-கிழக்கில் எழுந்தமானமான முறையில் பல சட்டவிரோத நடவடிக்கைகளையும், அரசியல் படுகொலைகளையும் செய்து தமது அரசியல் வாழ்வை ஓட்டின.

'83' இற்குப் பின்னர் அரசின் அத்துமீறல்களால் துரிதமான வளர்ச்சி பெற்றனர். தமிழ் மக்களுக்கு அரசின்மீது இருந்த நியாயமான பகையுணர்வும், ஆயுதப் படைகளின் கொடுஞ் செயல்களின் விளைவான வெறுப்புணர்வும், கூட்டணித் தலைமை மீதான நம்பிக்கையீனமும், ஆயுதப்படைகளினதும் பொலிசாரினதும் அடாவடித்தனத்துக்கு ஆளாகிய பெருவாரி இளைஞர்களினது மனக்கொதிப்பும் 'ஆயுதப்போரை தவிர வேறுவழியில்லை' என்ற நிலையை உறுதிப்படுத்தின. வட-கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் அனைவருமே அரசின் அடக்குமுறைக்கும் இராணுவ பயங்கரவாதத்துக்கும் உட்பட்ட சூழ்நிலையில் அரசிற்கும் ஆயுதப்படைகளுக்கும் எதிரான போராட்டம் முழுத் தமிழ்மக்களினதும் உணர்வை பிரதிபலித்தது. இந் நிலையிலேயே தீவிரவாத இளைஞர் இயக்கங்கள் கூட்டணிக்கு மாற்றுசக்தியாக தம்மை நிலைநிறுத்த முடிந்தது.

இந் நிகழ்வுகளுக்கு இன்னொரு முக்கிய காரணம்; இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் இடதுசாரி இயக்கம் இழைத்த தவறுகளும் ஆகும். இடதுசாரி இயக்கம் இலங்கையின் தேசிய சுதந்திரத்திற்கான இயக்கத்தின் வளர்ச்சியை ஒட்டியே வளர்ச்சியடைந்தது. '50'களில் தேசிய அரசியலில் ஒர் முக்கியமான சக்தியாகவும், தேசிய இனப் பிரச்சினையில் நல்ல நிலைப்பாடுகளையும் கொண்டிருந்

www.tamilarangam.net



-ந்து. காலப்போக்கில் பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலில் அமிழ்ந்தியதுடன் சிங்களப் பேரினவாதத்துக்கும் இரையாகியது. பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்ட பாரம்பரிய இடதுசாரிகள் சிங்கள இனவாதத்துள் சரணடைந்ததுடன், தமிழ் மக்களின்மீதான இன ஒடுக்குமுறைக்கு எதிராக சரியான நிலைப்பாடுகளை எடுக்கத் தவறிவிட்டனர்.

புரட்சிகர மார்க்கத்தை முன்னெடுத்த இடதுசாரி சக்திகளின் ஒரு பகுதியினர் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக வரட்டுத்தனமான நிலைப்பாடுகளையும், நடைமுறைகளையும் கைக்கொண்டிருந்தனர். "இலங்கையின் தமிழ் மக்கள் ஒர் தேசிய இனம் இல்லை" என்ற கண்டுபிடித்தன-மான விவாதங்களுக்கும் முடிவுகளுக்கும் வந்தனர். மார்க்சியத்தை யாந்திரிக ரீதியில் மெத்தப் படித்ததின் விளைவாக ஸ்டாலினால் வரையறுக்கப்பட்ட "தேசிய இனம்" பற்றிய கோட்பாடுகளை எடுத்துப் பொருத்தி 'மாபெரும் விவாதங்களை' நடத்தினர். "தேசிய இனம் என்பது பொதுவான பிரதேசம், பொது மொழி, கலாச்சாரம், சுய பொருளாதாரம் என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் தமிழ் மக்களுக்கு சுய பொருளாதாரம் என்ற ஒன்று இல்லை. எனவே தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் இல்லை" என்ற முடிவுக்கு வந்து சேர்ந்தனர்.

தமிழ்ப் பிரதேசங்களின் அரசியல் நிகழ்வுகளும் மக்களின் உணர்வுகளும் எங்கோ சென்றுவிட்ட நிலையில் அவற்றை துரத்திச் சென்று வெறுமனே 'அரசியல் எதிர்-வினை' கூறும் 'மார்க்சிச சாஸ்திரிகளாக' இருந்தனர். இடதுசாரிகள் எனச் சொல்லப்படுகின்ற இப் பகுதியினரின்

www.tamilarangam.net



நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் மத்தியிலும், குறிப்பாக முற்போக்கு சக்திகள் மத்தியிலும் நம்பிக்கையீனமும் பிளவுகளும் ஏற்பட்டது. இதன் விளைவாக கொள்கைப் பிடிப்புடைய ஒரு பகுதியினர் மார்க்சிச-லெனினிச இயக்கங்களாகத் தொடர்ந்தனர். சிலர் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு சந்தர்ப்பவாதத்துக்கு பலியாகினர். பெரும்பாலானோர் இடதுசாரி அரசியலில் இருந்து ஒதுங்கி காலப் போக்கில் வெறும் பார்வையாளர் ஆகினர்.

இடதுசாரி இயக்கத்தில் ஏற்பட்ட இப் போக்குகளினால் இடதுசாரி இயக்கம் தன்னை அமைப்பு ரீதியிலோ, அரசியல் கோட்பாட்டு அடிப்படையிலோ அரசியல் சக்தி என்ற வகையில் கூட்டணித் தலைமைக்கு மாற்று சக்தியாக தம்மை தயார்படுத்திக் கொள்ள முடியாத நிலையும் இன ஒடுக்குமுறையால் கொதித்தெழுந்த இளைஞர்களை நெறிப்படுத்தி ஸ்தாபன வடிவங்களுக்கு உட்படுத்திக் கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டது.

இந் நிலையில் த.வி.கூ க்கு மாற்றுசக்தியாக தம்மை நிலைநிறுத்திக் கொண்ட இளைஞர் இயக்கங்கள் சில, கூட்டணியினரால் தேர்தல் நோக்குடன் முன்வைக்கப்பட்ட 'தமிழ் ஈழ' கோரிக்கையை எவ்வித ஆய்வுமின்றி தமது இலட்சியமாகக் கொண்டு இயங்க ஆரம்பித்தன. கூட்டணியினரின் தமிழ் ஈழ கோரிக்கை குறுகிய அரசியல் நோக்கின் அடிப்படையில் எழுந்ததே ஒழிய அது தமிழ் மக்களின் நீண்ட கால தேவையாகவோ விருப்பமாகவோ இருக்கவில்லை என்பதையும் சாத்தியமான தீர்வுகளில் பிரிவினையும் ஒன்றேதவிர அதுதான் ஒரே தீர்வு அல்லது

www.tamilarangam.net



அதிசிறந்த தீர்வு அல்ல என்ற உண்மையையும் இவ் இணைஞர் இயக்கங்கள் கண்டறியத் தவறிவிட்டன.

தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை, அபிலாஷைகளை சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் அணுகாமல் 'சோசலிச தமிழ் ஈழம்' என்பதில் சோசலிசம் ஓர் அலங்கார வார்த்தையாகவும், தமிழீழம் என்பது விடுதலையின் நோக்கை நிறைவுசெய்யும் மார்க்கமாகவும் கண்டனர். சிங்களப் பேரினவாதத்துக்கும் - சிங்கள மக்களுக்குமிடையே வேறுபாடு காண இயலாத போக்கு விருத்தி பெற்று சில இயக்கங்களுக்குள் சிங்கள விரோதம்- தமிழ் இனவெறியாக வளர்ச்சி கண்டது. இதன் தொடர்பாடே சாதாரண அப்பாவி சிங்கள மக்களை உதிரிகளாக கொலை செய்வதிலிருந்து மிருகத்தனமான கூட்டுப் படுகொலைகள் வரை வெளிப்பட்டது/படுகிறது.

அத்தோடு முஸ்லிம் மக்களின் உணர்வுகளை மதிக்க இயலாத வடபகுதியின் 'துரைத்தன அரசியல்' அவர்கள்மீது திணிக்கப்பட்டு, அவர்களால் கிரணிக்கப்பட முடியாத நிலை - இன்று காத்தான்குடி, ஏறாவூர் படுகொலையாகப் பரிணமித்துள்ளது. இவை எல்லாவற்றையும் விஞ்சும் வகையில் வடக்கிலுள்ள முஸ்லிம் மக்கள் அவர்கள் பரம்பரையாக வாழ்ந்த மண்ணை விட்டே (புலிகளால்) விரட்டப்பட்டுள்ளனர். அத்தோடு முஸ்லிம் மக்களுக்கு எதிரான பிரச்சாரங்களும் வெறித்தனமாக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. இந் நிலைமை 'தமிழ்ப் பேரினவாதம்' என்ற புதிய சொற்பதத்தை அறிமுகம் செய்யுமளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது. இவ்வாறாக குறுந்தேசிய வாதம் சிங்கள-தமிழ்-முஸ்லிம் மக்களிடையே இடைவெளியை நிலைவைத்துள்ளது.

► முற்றும் ◄

www.tamilarangam.net



## திரைப்படவிமர்சனம்.

# பிறவி

(மலையாளம்)



அண்மைக் காலமாக இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டு; சூரிச், பேர்ண் போன்ற நகரங்களில் திரையிடப் பட்டிருக்கிறது "பிறவி" எனும் மலையாளத் திரைப் படம். வெளிநாடுகள் குறிப்பாக மேற்கத்தைய நாடுகள் வாங்கித் திரையிடும் அளவுக்கு தரமான திரைப்படங்களைத் தருகின்ற மாநிலங்கள்; இந்தியாவிலேயே மேற்கு வங்கமும், கேரளமும் ஆகும். இவை உலக அளவில் பேசப்படும் அளவுக்கு தலை சிறந்த இயக்குனர்களைத் தந்திருப்பதோடு; பல சர்வ தேச விருதுகளையும் பெற்றுக் கொடுத்துள்ளன. இத்தகைய திரைப்படங்கள் வெளிநாட்டவர்களால் விரும்பிப் பார்க்கப்படுவதற்கு காரணம்; இந்தியாவை, அந்த மக்களின் வாழ்க்கையை உள்ளபடியே படம் பிடித்துக் காட்டுவதேயாகும். உலக அளவில் பல சர்வதேச விருதுகளை "பிறவி" திரைப்படம் பெற்றிருப்பது அதன் தகுதியை நிர்ணயிக்கிறது.

கேரள மாநிலத்தின் குக்கிராமம் ஒன்றில் வசிக்கும் சிறிய ஏழைப் பிராமணக் குடும்பம் ஒன்றின் நிகழ்வுகளை கலை நேர்த்தியுடன் உள்ளபடியே படம்பிடித்துக் காட்டுகிறது. "பிறவி" மரபுகளில் இருந்து மீறாத; ஏழ்மையில் வாழும் பிராமணக் குடும்பம். வயதான கண்பார்வை மங்கிய தாய், தள்ளாடும் வயதிலும் மகனின் வருகையை எதிர்பார்த்து ஒவ்வொரு நாளும் அடுத்த கரையிலுள்ள பஸ்தரிப்பு வரை நடையாய் நடக்கும் தகப்பன். திருமணவயதில்; தம்பியின் எதிர்கால உழைப்பை

www.tamilarangam.net



நம்பி கரைசேரக் காத்திருக்கும் சகோதரி. இவர்களின் எதிர்காலம் கருதி பட்டணம் சென்று படித்துக் கொண்டிருந்த அந்த இளைஞன் திடீரென ஒரு நாள்; 'காவல்' துறையினரால் கைது செய்யப்பட்டு 'காணாமல்' போகிறான். ஆயினும் அவன் வருவான் என்ற நம்பிக்கையில் வாழ்க்கையை செலுத்திக் கொண்டிருந்த அந்த குடும்பத்தின் கனவுகள் அவனின் வராமை நிச்சயமானவுடன் சிதைகின்றன. தந்தைக்கு இறுதியில் பைத்தியம் பிடிக்கிறது. இது தான் பிறவியின் கதைச் சுருக்கம்.

அரச ஒடுக்கு முறையந்திரங்களான பொலிஸ், இராணுவத்திற்கு ஒரு இளைஞனை கைது பண்ணி 'காணாமல்' போகச் செய்வதோ அல்லது பகிரங்கமாக கொலை செய்வதோ சாதாரண விடயம். ஆயினும் அந்த இளைஞனின் பின்னணியில் அவனையே நம்பியிருக்கும் ஒரு குடும்பத்தில் அது ஏற்படுத்தும் தாக்கம், விளைவுகள் எத்தகையவை என்பதனை மிக அழகாக, நாசுக்காக சொல்கிறது பிறவி. இந்த திரைப்படம் உருவானதன் பின்னணியில்; கேரளத்தில் பரபரப்பை ஏற்படுத்திய பொறியியல் கல்லூரி மாணவன் ராஜனின் கொலை இருந்ததாக சொல்லப்படுகிறது. ராஜன் என்ற மாணவன் நக்சலைட் என கருதி பொலிஸால் கைது செய்யப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டான். இந்த கொடூரத்துக்கு நீதி கேட்டு அவரது தந்தை பல ஆண்டுகள் அரச நீதி மன்றங்களுக்கு அலைந்திருக்கிறார். ஆயினும் இக் கொலையை மூடி மறைப்பதிலும், வழக்கை இழுத்தடிப்பதிலுமே அரசு அக்கறை கொண்டிருந்தது. இதனை கண்டித்து வெகுஜன இயக்கங்களும் நடை பெற்றன. ஆயினும் 'நீதி' கண்ணை மூடிக் கொண்டது. இதன் நினைவில் கொண்டுவருவது போல் இப்படத்தில் சில காட்சிகள் இடம் பெற்றுள்ளன. பிறவியில் வயதான தந்தை தனது மகனைத் தேடி நகரத்திற்கு வருகிறார். பொலிஸ் அதிகாரிகள், அமைச்சர்கள் என பலரை

www.tamilarangam.net



சந்திக்கிறார். அவர் அங்கு அலைக்கழிக்கப்படுவதும், இறுதியில் ஏமாற்றமடைந்து திரும்புவது போன்ற காட்சிகளை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்: ஆயினும் அதிகாரிகள் அலட்சியமாக நடந்து கொள்வதும், சம்பவம் வெளிப்பட்டால் வீண் தொல்லைகள் ஏற்படும் என அச்சம் கொள்வதும், அதனால் விவகாரத்தை மறுப்ப முனைவதும் சித்தரிக்கப்பட்டிருந்த போதும் அந்த இடத்தில் பொலிஸ் அடக்கு முறையின் கொடூரம் சரியாக வெளிப்படுத்தப்படவில்லை என்றே தோன்றுகிறது. இதற்கு சென்சாரின் தொல்லை ஒரு காரணமாக இருக்கலாம். அத்துடன் அரச ஒடுக்கு முறையின் விளைவை அல்லது தாக்கத்தின் ஒரு பரிமாணமே இக்கதை என்ற ரீதியில் அது தேவையற்றதாக கருதியிருக்கலாம். என்ற போதிலும் மேற் சொன்ன குறைபாடு தென்படவே செய்கிறது.

கலைத் தரத்திலும், தொழில் நுட்பத்திலும், குறிப்பாக ஒளிப் பதிவிலும், ஒலிப் பதிவிலும் உயர்ந்து நிற்கிறது பிறவி. வழமையாக கண்ணைப் பறிக்கும் வெளிச்சத்தில் அல்லது இரவுக் காட்சிகளைக் கூட நல் வெளிச்சத்தில் பார்த்து பழக்கப்பட்ட நமது கண்களுக்கு பிறவியின் ஒளிப்பதிவு வித்தியாசமானதாகப் படுகிறது. பாடல்கள், விதம் விதமான ஆடைகள் இன்றி, பாத்திரங்களுக்கு ஒப்பனையின்றி பார்ப்பது சினிமாவின் மாறுபட்ட ஒரு பக்கத்தைப் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. எளிமையான பச்சைப் பசேலென்ற அக் கிராமத்தை அதன் வசதிக் குறைபாட்டை துல்லியமாக படம் பிடித்திருப்பதும் அதற்கு மெருகூட்டுவது போல் பின்னணி இசை அமைந்திருப்பதும் படத்தின் முக்கியமான சிறப்பம்சம் ஆகும்.

நடிப்பை பொறுத்த வரையில் வயதான தகப்பன் பாத்திரம் ஏற்றிருக்கும் பிரேம்ஜி, மகளாக வரும் அர்ச்சனா, தாயாக வரும் திருமதி கிருஷ்ண மூர்த்தி, படகோட்டியாக வரும் சிறிராமன் இவர்கள் தான் முக்கிய பாத்திரங்கள். சூழ்நிலைக்கேற்ப நடிகர்களைத் தேர்ந்தெடுத்திரு

www.tamilarangam.net



ப்பதும், வெகு இயல்பாகவே அந்த பாத்திரங்களை உணர்ந்து அந்த நடிகர்கள் நடித்திருப்பதும், படம் பார்க்கும் போது அவர்கள் நடிக்கிறார்கள் என்பதைவிட பாத்திரங்களாகவே வாழ்ந்து விடுகிறார்கள் என்பதே சிறப்பானதாக இருக்கும். வழமையான சினிமாக்களில் குறிப்பாக தமிழ் சினிமாக்களில் கண்ணீர் சிந்த வைப்பதற்கும், சோக உணர்வை தூண்டவும் என்ன என்னவெல்லாமோ செய்வார்கள். காதைக்கிழிக்கும் பின்னணி இசையுடன், நடிகைகளின் அழுகுரல் கூப்பாடும் இடம் பெறும். ஆனால் பிறவியில் இடம் பெறும் சிலகாட்சிகள்; இவைகள் இன்றி நம் மனதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பாடசாலையில் கடமை முடிந்து திரும்பும் ஆசிரியை அர்ச்சனா வாய்க்கால் கரையோரம் தனிமையில் நடந்து வர பின்னணி இசையில் யாரோ சிறுவன் வாய்க்கால் நீரில் குதிப்பது போன்ற இசை சேர்க்கப்பட; தம்பி தான் விழுந்து விட்டதாக ஒரு கணம் திகைத்து ஏங்கி நிற்பது, தம்பி வசித்த பாடசாலை விடுதிக்கு சென்று அவனின் அறையை தொட்டு தடவிப்பார்த்து கடைசியாக எழுதப்பட்ட அந்த கடிதத்தை வாசித்து விம்மி வெடிப்பது நம் நெஞ்சைத் தொட்டு செல்கிறது.

மொத்தத்தில் உயிரோட்டமுள்ள, அழமான ஒரு கவிதையை வாசித்தது போன்ற உணர்வை படம் ஏற்படுத்துகிறதென்றே சொல்லலாம். இந்த 'கவிதையை' எழுதி நெறிப்படுத்திய இயக்குனர் "கருண் என் சாஜி" பாராட்டப்பட வேண்டியவர்தான். கூடவே நம் முன், ஒரு கேள்வியும் எழுகிறது. முன்னர் குறைந்த சந்தை வாய்ப்பின் காரணமாக குறைந்த பட்ஜெட்டில் ஓரளவு தரமான படங்களை தந்த மலையாளத் திரைப்பட உலகம் இன்று அதன் சந்தை வாய்ப்பின் காரணமாக; மசாலாப்படங்களிலும், மிகுந்த பொருட்செலவுப் படங்களிலும் அக்கறை செலுத்துவதால் பிறவி போன்ற படங்கள் 'கலைப்படைப்புகள்' என முத்திரை குத்தி ஒதுக்கப் படுவதற்கான வாய்ப்புகளை கூடுதலாக

[→ 36 ம் பக்கம்]

www.tamilarangam.net



# உலக நடப்பு வளைகுடா




சர்வதேச அரங்கில் இன்று அனைவரது கவனத்தையும் வளைகுடா யுத்தம் ஈர்த்துள்ளது. அமெரிக்கா அதனுடன் கூடிய நேச நாடுகளது படைகளும், ஐ.நாவின் படைகளுடன் நிற்கின்றோம் என நடுநிலை வாதிகள் போல் காட்டிக்கொண்டு அமெரிக்காவுக்கு ஆதரவாய் மொத்தம் 16 நாடுகள் ஈ.ராக்குக்கு எதிராய் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. முதல் சில மணி நேரங்களிலேயே "ஈ.ராக்கின் முக்கிய விமானத்தளங்களையும்" அழித்து விட்டோம் என அமெரிக்கா கூறுகிறது. மறு புறத்தில் ஈ.ராக்கோ தற்காப்பு யுத்தத்தில் நின்று கொண்டு அவ்வப்போது இஸ்ரவேலுக்கும், சவுதிக்கும் எதிராய் ஏவுகணைகளை ஏவி உயிர் இழப்புக்களையும், பொருள் சேதத்தையும் இழக்க செய்துள்ளது.

ஈ.ராக் குவைத்துக்குள் ஆக்கிரமிப்பு நோக்கிலேயே இறங்கியிருந்தது. குவைத்தை விட்டு ஈ.ராக் வெளியேற வேண்டும் என்ற தீர்ப்பந்தம் ஐ.நா சபையால் கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து, இஸ்ரவேல் பாலஸ்தீனியர்களின் பிரதேசத்தை விட்டு வெளியேறினால்தான் ஈ.ராக் குவைத்தை விட்டு வெளியேறும் என்று கூறியிருந்தது. தனது நெருக்கடியில் இருந்து தப்பிக்கவே "இஸ்ரவேல் வெளியேறவேண்டும்" என்று சதாம், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொண்டாலும், ஐ.நா.சபையோ

www.tamilarangam.net


இஸ்ரவேலை பாலஸ்தீனர்களின் பிரதேசத்தில் இருந்து வெளியேற வேண்டுமென்ற நியாயமான கோரிக்கையை கவனத்தில் எடுக்காது இருப்பது ஐ.நா சபை அப்பட்டமாகவே அமெரிக்காவிற்கு சார்பானது என்பதை வெளிப்படுத்தியுள்ளது. ரசியாவும் சதாமை நிபந்தனையின்றி குவைத்தை விட்டு வெளியேற வேண்டும். இல்லையேல் யுத்தம் தொடுக்கலாம் என்ற ஐ.நா சபையின் தீர்மானத்துக்கு ஆதரவாகவே வாக்களித்துள்ளது.

முதலாம் உலக யுத்தத்தின் பின் ரசியாவும், ஏகாதிபத்திய நாடுகளும் இரு அணிகளாய் செயல்பட்டு இருந்தன. புரட்சிக்கு பிந்திய ரசியாவில் சோசலிச கட்டுமானங்கள் சீர்குலைந்து போதிலும் தொடர்ந்தும் ரசியா அமெரிக்காவிற்கு எதிரான அணியிலேயே இருந்து வந்தது.

இன்று உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடி, தேசியப்பிரச்சனை, வேலையின்மை போன்ற காரணங்களால், ரசியா பஞ்ச நாடாய் இன்றுள்ளது. இன்றைய ரசியாவின் நிலைக்கு இந்தியாவே உதவி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு கொப்பர்சேவ் அமெரிக்காவையும், ஐரோப்பிய நாடுகளையுமே பெரிதும் நம்பியுள்ளார்.

இன்றைய ரசிய நிலையை பயன்படுத்திக்கொண்டு தனது மேலாதிக்கத்தை வளைகுடாவிலும் நிறுவுவதற்கு தடையாய் இருந்த சதாமையும், பலவீனப்படுத்த வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு உள்ளது. அத்தோடு தனது பேட்டை ரவுடியான இஸ்ரவேலுக்கு, ஈராக்கின் இராணுவ வளர்ச்சி ஆபத்தை உருவாக்கும் என்பதால் ஈராக் மீது யுத்தம் தொடுக்க வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கு ஈராக் பணியாத நிலையில் இராணுவ நடவடிக்கை எடுக்காவிடின் அமெரிக்காவுக்கு உலக நாடுகள் மீது செலுத்தி வரும் 'நாட்டாண்மை' பாத்திரத்தின் தன்மை குறைவாகவே மதிப்பீடு செய்யப்பட்டு விடும் என்ற பயமே ஈராக் மீது யுத்தம் தொடுக்க வேண்டி ஏற்பட்டது.

www.tamilarangam.net



குவைத்தை ஆக்கிரமித்த உடனே ஈராக் மீதான எதிர்ப்புகள் கிளம்பியது. அமெரிக்கா வளைகுடாவில் உட்பிரவேசித்ததும் அமெரிக்காவிற்கு எதிரான ஈராக்கின் வேண்டுகோளினால் முஸ்லீம் நாடுகளின் மக்கள் ஆதரவு சதாமுக்கு கிடைத்துள்ளது.



«Wir können ja schliesslich miteinander reden...»

ஈராக் அமெரிக்காவுடனான நேரடி மோதலை எதிர்பார்த்து ஈரானுடனான எல்லைப் பிரச்சனையை தீர்த்து கொண்டது. இது ஓர் இராஜதந்திர நடவடிக்கையாக அமைந்தது. இதனால் ஈரான் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தாக்குதலை ஈராக்குடன் இணைந்து செய்வதற்கான சாத்தியங்களை உருவாக்கியிருந்தது. அமெரிக்க சார்பு அரபு நாடுகளிலும் முஸ்லீம்களின் ஆதரவை திரட்டியுள்ளது. அண்டைய நாடுகளின் அரசுகள் ஈராக்குக்கு ஆதரவாக யுத்தத்தில் இறங்காவிடினும் அங்குள்ள மதத்தலைவர்கள் யுத்தத்தில் இறங்க வேண்டுமென்று தீர்ப்பந்தம், ஈராக்குக்கு சார்பாகவே எதிர்காலத்தில் அமையும். ஈராக் மீது இஸ்ரவேல் தாக்குமாயின் அது முஸ்லீம் நாடுகளை உடனடியாக ஈராக் பக்கம் சார்பெருக்கவை செய்யும். இதனைப் புரிந்து அமெரிக்கா இஸ்ரவேல், ஈராக் மீது தாக்காமல் தடுத்து வருகிறது. ஈராக் ஏவுகணைகளை தடுப்பதற்கான நவீனரக இராணுவதளபாடங்களை கொடுத்தும் இஸ்ரவேல் தான் பழிக்குப் பழி வாங்கப்போவதாக அறிவித்துள்ளது.

www.tamilarangam.net



யுத்தத்திற்கெதிராக அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் பெருகிக் கொண்டே செல்கிறது. "எங்கள் குழந்தைகளை எண்ணெய்க்காக இழக்கமாட்டோம்" என்று கோசம் அமெரிக்கா, ஆக்கிரமிப்புக்கெதிரான யுத்தம் செய்யவில்லை என்பதையும் எண்ணெய் எடுப்பதே நோக்கமாக உள்ளது என்பதை ஐரோப்பிய மக்கள் வெளிப்படையாக இனம் காட்டியுள்ளனர். இதனால் ஓர் நீண்டகால யுத்தத்தை அமெரிக்க அணியால் நடத்துவது என்பது கடினமாகவே அமையும். ஈராக் மக்கள் முஸ்லீம் மதத்திற்கான புனித யுத்தமாக கருதுவதால் அவர்களின் உயர் இழப்புகள் தியாகமாக கருதப்பட்டு தொடர்ந்து யுத்தத்தில் ஈடுபடவேண்டுமென்ற வெறியை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. மறுபுறத்தில் அமெரிக்க அணியினர் யுத்தத்திற்காக ஒரு நாளைக்கு 600 மில்லியன் டொலர்களை தொடர்ந்து செலவழித்துக் கொண்டிருப்பார்களா என்பது கேள்விக்குறியே? ஏற்கனவே கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு பொருளாதார, உதவிகளை வழங்க உறுதியளித்துள்ள இந்த நிலையில், ஐரோப்பிய சமூகத்திற்கான பொருளாதார கூட்டமைப்புக்கு பெருமளவு நிதி தேவையான இக்காலகட்டத்தில், வளைகுடா யுத்தத்தில் இவர்களது தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கை நிகழுமா என்பது கேள்விக்குறியே.

தற்போ

தைய யுத்தத்தின் விளைவுகளால் அமெரிக்க அணிக்கு பெருமளவு பொருள் சேதம் ஏற்பட்டுள்ளது ஆனால் ஈராக்கிலோ பொருள் சேதத்துடன் மட்டுமல்லாது பல மக்களின் உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளது. 2ம் உலக யுத்தத்தில் பாவிக்கப்பட்ட குண்டுகளை விட அதிக குண்டுகளை ஒரு வாரத்துக்குள்ளே பாவிக்கப்பட்டதும் பக்தாத் முழுவதும் "வாணவேடிக்கை போல் காட்சியளிப்பதாக" அமெரிக்க விமானிகள் கூறியிருந்தது ஈராக்கின் மீதான தாக்குதலின் கொடூரத்தை வெளிப்படுத்தியுள்ளது. ஆனால் அமெரிக்க செய்தி நிறுவனங்கள் திட்டமிட்டு ஒரு பக்க சார்புத்தன்மையில் இருந்து கொண்டு இவ்

www.tamilarangam.net



ரவேலில் இருந்த, காயமடைந்த சிலரை திரும்ப திரும்பக் காட்டி தமக்கு சார்பான அனுதாப அலையை எடுக்க முயல்கிறது.

இந்த யுத்தத்தில் ஈராக் தோற்கடிக்கப்படுமானால் குவைத்தில் உள்ள எண்ணெய் கிணறுகளுக்கு குண்டுகளை வைத்து தகர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாய் செய்திகள் வருகின்றன. இதனால் ஏற்படும் தீவிபத்தை அழிக்க பல மாதங்கள் ஆகுமென விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இதனால் குவைத்திலுள்ள அனைத்து இடங்களும் சேதமாக்கப்பட்டு அமெரிக்கா இறுதியில் யுத்தத்தில் வென்றாலும், குவைத்திடமிருந்து எதனையும் பெறமுடியாத நிலையே அமெரிக்காவுக்கு ஏற்படும். அத்தோடு அமெரிக்காவுக்கு எதிரான எதிர்ப்புணர்வு தொடர்ந்து நிகழும் என்பது மறுப்பதற்கில்லை. இன்றைய யுத்தத்தின் போக்கைப்பார்க்கும் போது இது நீண்ட கால யுத்தமாய்த்தான் செல்லும் என அமெரிக்க இராணுவ அதிகாரிகளே ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

சதாமும் அவரது இப்பொழுதும் குவைத்தை ஆக்கிரமித்தது தவறுதான். ஆனால் கிரனடா போன்ற நாடுகளை ஆக்கிரமித்த அமெரிக்காவுக்கு அதை தட்டிக்கேட்க எந்த ஒரு தார்மீக பலமும் இல்லை. இதில் அமெரிக்காவின் நாட்டாண்மைத்தனத்திற்கெதிராக அரபுமக்கள் போராடுவது சரியானதே. அதற்கே உலக மக்கள் ஆதரவை தெரிவிக்கவேண்டும். சதாம் அரபுமக்களின் எதிர்ப்புணர்வை தனக்கு சாதகமாக பயன்படுத்த முனைகிறார் என்பது தெளிவானது. இருந்த போதும் போராட்டப்போக்கிலிருந்தே ஒரு சரியான தலைமை உருவாக முடியும் என்ற அடிப்படையில் இன்று அமெரிக்காவிற்கு எதிரான யுத்தத்தின் போது அரபு மக்கள் சரியான இலக்கை நோக்கி முன்னேறியே தீருவார்கள்.


---

*

www.tamilarangam.net



## ● ரசியா - தேசிய நெருக்கடி.




8.2

இன்று சர்வதேச தொலைத் தொடர்பியலாளர்களின் பார்வைக்குட்படும் முக்கிய புள்ளிகள் இரண்டு.
ஒன்று; வளைகுடா யுத்தம் இரண்டு; சோவியத் யூனியனின் உள்நாட்டு அரசியல் பொருளாதார நெருக்கடிகள்.
முதலாவதான வளைகுடா யுத்தம் தொடர்கிறது. செய்திகள் பல கோணங்களில் வந்து குவிகின்றன.
இரண்டாவதான சோவியத் யூனியனின் உள்நாட்டு அரசியல் பொருளாதார நெருக்கடிகள் மேலும் பல முனைகளில் கோர்பச்சேவ் தலைமைக்கு சவாலாகிக் கொண்டு போகின்றது.

சென்ற ஆண்டின் உலக சமாதானத்துக்கும் அமைதிக்குமான நோபல் பரிசு ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவுக்கு வழங்கப்பட்டது. அப்போது அமெரிக்கா முதல் மேற்குலகத் தலைவர்கள் தொலைத் தொடர்பு சாதனங்கள் உட்பட எல்லாமே பாராட்டி புகழ்ந்தன. கோர்பி என்று மேற்குலக சங்கேதத்தை

www.tamilarangam.net



செவ்வமாக அமைக்கப்படும் மிகைல் கோர்பச்சேவுக்கு இன்றைய கட்டம் ஒரு சோதனைக் காலமாக உள்ளது. கோர்பசேவின் நம்பிக்கைக்கு உரியவராகவும் உலக அரசியல் அரங்கில் மிகவும் பிரசித்தி பெற்றவருமான வெளியுறவு அமைச்சர் எட்வார்ட் செவனாட்சாவும் கடந்த டிசம்பர் மாதத்தில் பதவி விலகிவிட்டார்.

ஆசிய ஐரோப்பாவுக்குள் மட்டும் அல்லாமல் உலகத்திலேயே ஒரு பெரிய கோபுரமாக உயர்ந்திருந்த 'சோவியத் சோசலிச' குடியரசு இன்று உடைந்து சிதறுவதாக பத்திரிகைகள் எழுதுகின்றன. உள்நாட்டு அரசியல் பொருளாதார நெருக்கடிகள் மேலும் இறுக்கமாக பல முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

கோர்பச்சேவ் பதவி விலக வேண்டும். கோர்பசேவ் ஒரு சர்வாதிகாரி. என்ற சுலோகங்களோடு, மொஸ்கோவில் ஜனவரி நடுப்பகுதியில் 3 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பெரும் ஊர்வலம் ஒன்றை நடாத்தியுள்ளனர். பால்டிக் குடியரசுக்குள் அடங்கும் லித்துவேனியாவில் சோவியத் இராணுவம் ஜனவரி 13 ல் நடாத்திய தாக்குதல்களில் 14 மக்கள் கொல்லப்பட்டும், 100 மக்கள் காயப்பட்ட சம்பவமே மேற்படி மொஸ்கோ ஊர்வலத்துக்கு காரணமாகிறது.


“போர் வளைகுடாவுக்குள் மட்டுமல்ல பால்டிக் குடியரசுகள் மீதும் தான். பால்டிக் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஐ.நா உடனடியாக பங்கு கொள்ள வேண்டும்.”

ஐக்கிய நாடுகள் சபைக்கு இப்படி வேண்டுகோள் விடுத்தது; மேற்குலக மக்களோ; அரசியல் தலைவர்களோ அல்ல. மாறாக பால்டிக் குடியரசுக்குள் அடங்கும் லெத்லாண்ட், எஸ்லாண்ட் குடியரசுகளின் தலைவர்களும், ரஷ்ய குடியரசின் தலைவருமான யெல்ஸினுமே

www.tamilarangam.net



அத்துடன் ஐ.நாவுக்கு மனு ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.




சோவியத் யூனியன் நூறுக்கும் அதிகமான பல்வேறு தேசிய இனங்களை, இனக்குழுக்களை இணைத்து வைத்திருக்கிறது. 67 குடியரசுகளைக் கொண்டது

முதல் முதலாக சோசலிசத்துக்கான புரட்சியை நடாத்தி பல்வேறு தேசிய இனங்களினதும் தனித்துவத்தையும் கலாச்சார மரபுகளையும் பிரிந்து போகும் சுயநிர்ணய உரிமைகளையும், உறுதிப்படுத்தும் ஒரு சோசலிச நாடாக ரஷ்யா தன்னை வெளிப்படுத்தியது. அதே சோவியத் யூனியனில் தான், அந்த குடியரசுகளில் இருந்து தான்; ஐ. நா. சபையிடம் நீதி கோரி இன்று மனு போகின்றனர். இந்த மனுவில் இணைந்த ரஷ்ய குடியரசு தலைவர் யெல்சின் கொர்பச்சேவுக்கு எதிராக போட்டியாக இருப்பவர். கொர்பச்சேவின் பொருளாதார மறு சீரமைப்பு போதாது எனவும், மேற்கு ஐரோப்பிய, தென் கொரியா போன்ற பொருளாதார அமைப்பை ரஷ்யாவுக்கும் கோரிவருகிறார். கடந்த 88 வது சோவியத் காங்கிரஸில் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து வெளியேறியவர். அதாவது அப்பட்டமாகவே தன்னை ஒரு முழுமையான முதலாளித்துவ ஜனநாயக சீர்திருத்தவாதியாக வெளிக்காட்டி வருபவர்.

இன்று சோவியத் மக்களின் முக்கிய பிரச்சனை பஞ்சம். கொர்பச்சேவின் பொருளாதார மறு சீரமைப்பு, சோவியத் மக்களின் பட்டினியை பட்டியல் போட்டு காட்டுவதற்கே பயன்படுகிறது. கடைகளில் எல்லாம் வெறும் அலுமாரிகள் தான் இருக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொர்பசேவின் பொருளாதார மறுசீரமைப்பை பற்றி ஒரு பண்ணைத் தொழிலாளி [வயதான பெண்மணி] குறிப்பிடும் போது; "இதுவரை எனக்கு கிடைத்த கஞ்சியைக் கூட பறித்துவிடப் போகிறது" என்றார். இந்த பெண்மணி கூறுவது உண்மைதான். 'சோசலிஸ' அமைப்பில் உருவாக்கப்பட்ட கூட்டுப் பண்ணைகளை கலைத்து 100 வருடங்களுக்கு தனியாரிடம் கொடுக்கும் சட்ட திருத்தங்களையும், இப்போது செய்துள்ளார் கொர்பச்சேவ்.

கிழக்கு ஐரோப்பாவில் 89ல் அடித்த ஜனநாயக சீர்திருத்த புயல் இப்போது சோவியத்துக்குள்ளேயும் புகுந்து விட்டது. அது எங்கே தனது அரசை ஆட்டம் காண செய்து விடுமோ? என்று கொர்பச்சேவ் அச்சம் கொண்டுள்ளார். அதனால் தானோ என்னவோ கூர்மையடைந்துள்ள தேசிய இனப் பிரச்சனைகளை இராணுவத்தை கொண்டு அடக்கவே முயல்கிறார். சோவியத்தில் தேசிய இனப் பிரச்சனை கடந்த ஐந்து வருடங்களில் அதிகரித்திருக்கிறதே தவிர தீர்க்கப்பட்டதாக இல்லை. அசர்பைசான், ஆர்மேனியா, மால்டாவியா, ஜார்ஜியா தேசிய இனப் போராட்டங்களை எல்லாம்; வெறும் பிரிவினைக்கான போராட்டமாக கொர்பச்சேவ் சித்தரிக்க முயல்கிறார். அதிலும் ஜார்ஜியா மக்களின் போராட்டத்தை அடக்குவதற்கு கொர்பாச்சேவ் நச்சு வாயுக்களையும் பயன் படுத்தியுள்ளார்.

கொர்பச் சேவின் கிளாஸ்நோட் [பகிரங்கப் படுத்தல் -ஜனநாயகப்படுத்தல்], பிரஸ்ரோய்க்கா [மறு சீரமைப்பு] போன்றவை ஐந்து வருடங்களிற்கு முன்பு சோவியத் மக்களிடம் மட்டும் அன்றி உலக மக்களிடமும் பெரும் வரவேற்பை பெற்றது. லெனினுக்கு பிறகு ரஷ்யாவில் இரண்டாவது புரட்சியை நடாத்திய தலைவர் என்று கொர்பச் சேவ் புகழப்பட்டார். ஆயினும் கொர்பச் சேவ் மறுசீரமைப்புக்கு [பொருளாதாரத்தில்] கொடுத்த முக்கியத்துவத்தை 'பகிரங்கப்படுத்தலுக்கு'

www.tamilarangam.net



[கி]ளாஸ்நோட்டுக்கு கொடுக்கத் தவறிவிட்டார். என்றே இன்று பத்திரிகைகள் கணிப்பிடுகின்றன. அப்படி அவர் கிளாஸ்நோட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பாரெனில்....

இன்று கூர்மை அடைந்திருக்கும் தேசிய இனப்பிரச்சனைகளை தீர்ப்பதற்கு இராணுவதீர்வை தவிர்த்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளித்திருக்க வேண்டும். ஆனால் அவர் மதிப்பளிக்கத் தவறிவிட்டார். இதனால் லித்துவேனியாவில், ஜோர்ஜியாவில் நிகழ்ந்த போராட்டம் மற்ற குடியரசுகளிலும் தொடரவே போகிறது.

இன்று சோவியத் மக்களை பீடித்துள்ள பஞ்சத்துக்கு அவசர பொருளாதார உதவிதனை அமெரிக்கா, ஐரோப்பிய பொருளாதார சமூகம் உட்பட பல மேற்கு நாடுகள் செய்து வந்தன. ஆனால் இன்று லித்துவேனியாவில் நடந்த இராணுவத் தாக்குதல்களை காரணம் காட்டி தமது பொருளாதார உதவிகளை இடைநிறுத்தப் போவதாக அறிவித்துள்ளன.

இந்நிலையில் கொர்பசேவ் தனது கிளாஸ்நோட்டை - பகிரங்கப்படுத்தல் - எப்படி தொடர்ந்து நடைமுறைப்படுத்தப் போகிறார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். உண்மையில் ரஷ்ய மக்களின் உயர்ந்த உன்னத வாழ்வை கொர்பசேவ் விரும்புவாராயின் அவர்களின் நியாயமான உணர்வுகளுக்கு தீர்வை முன்வைத்தே தீர வேண்டும்.

---

26ம் பக்கம்.

காணப்படுகிறது. தரக்குறைவான சினிமாக்கள் மலிந்துள்ள இன்றைய நிலையில் அத்தகைய ரசனையில் கிடந்து உழலும் பெரும்பாலான ரசிகர்களிடம் "பிறவி" போன்ற திரைப்படங்கள் தாக்கத்தை ஏற்படுத்துமா? அவர்களின் ரசனையில் மாறுதலைத்தூண்டுமா? அதாவது அந்த மக்களிடம் எடுபடுமா என்பதே கேள்வி?

- ராகவன் -

# கறுப்பு ஆரியன்

வெயிலில் காய்ந்த உன் இளம் பழுப்பு ரோமம்
பொன்னாக மாறும்;
உன் விழிகளில் ஆழ்கடலின் நீலம் ஒளிரும்;
சூரியன் உன் சருமத்திற் செம்மையூட்டிக்
கரும்புள்ளி குத்தும்;
கூரிய நாசியும் மெலிந்த இதழ்களும் கூறும்:
"இவனோர் ஆரியர்"
ஆனாலும்
தோலை வெளுப்பிக்கு முன்னிருந்த மைக்கல் ஜக்ஸனைவிட
முகம்மது அலியையும் கார்ள் லூயிஸையும் விட
மார்டின் லூதர் கிங் ஐவிட, மல்கொம் எக்ஸையும் விட
நீ கரியவன்
எவ்வாறென்று என்னைக் கேட்காதே -
உன்னிடமில்லாத செல்வத்தையும் செல்வாக்கையும் கேள்,
உனைச் சூழும் வறுமையைக் கேள்,
நிச்சயமற்ற உன் எதிர்காலத்தைக் கேள்,
மழுங்குண்ட உன் சமுதாய உணர்வைக் கேள்
அது விழித்தெழும்போது நித்திரையூட்ட
இனவெறி பருக்கும் பணமூட்டைகளைக் கேள்,
உலகத்தின் எஜமானர்களின்
குரல்வளையை நெருக்கிக் கேள் !

— சிவா —

www.tamilarangam.net



# கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களும் சோஷலிசத்தின் எதிர்காலமும்

## சமுத்திரனின் கட்டுரை பற்றி சில கருத்துக்கள்

'சக்தி' இதழ் இரண்டில் வெளிவந்த "கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களும் சோசலிசத்தின் எதிர்காலமும்" என்ற கட்டுரையுடன் உடன்பாடு கொள்ள முடியாத சில அம்சங்கள் உண்டு அவை எல்லாவற்றையும் இங்கே எழுதுவதாக இருந்தால்; இக்கட்டுரை மிக நீண்டதாக இருக்கும். ஆகவே முக்கியமாக முரண்படுகின்ற மூன்று விடயங்கள் மட்டும் இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

முதலாவதாக "இருந்து வந்த சோசலிச அமைப்பு" "நடைமுறைச் சோசலிசத்தின் வீழ்ச்சி" என்ற இரண்டு விதமான சொற்சேர்க்கைகளின் மூலம் கிழக்கு ஐரோப்பிய சமுதாயங்களை அழைக்கின்றார். மிக மிக அடிப்படையான கேள்வி இருந்து வந்தது சோசலிசமா? என்பதாகும். சோசலிசம் என்பது முதலாளித்துவத்திற்கும் கம்யூனிசத்திற்கும் இடையிலுள்ள இடைக்கட்டம் மட்டுமல்ல; அத்துடன் அது கம்யூனிசத்தை நோக்கிய திசை வழியிலும் இருக்க வேண்டும். கிழக்கு ஐரோப்பிய சமுதாயங்களில் ஒரு சில சோசலிசத்திற்கான பண்புகள் - அல்லது சோசலிசத்தில் நிலவும் ஒரு சில நிலைமைகள் - இருந்த போதும்; இறுதியாக மாற்றங்கள் நடந்த கால கட்டங்களில் அவை கம்யூனிசத்திற்கான திசை வழியில் இருக்கவில்லை என்பதை உறுதியாக கூறலாம். அவை இறுதிக் காலங்களில் - அதாவது மாற்றங்களுக்கு முற்பட்ட இறுதிக் காலங்களில் - ஒடுக்கு முறை, சுரண்டல் என்பவற்றை வளர்ச்சிப் போக்கில் கொண்டுள்ள சமுதாயங்களாக இருந்தன. மேலும் கம்யூனிசத்திற்கான திசையில் இயங்கும் ஒரு சமுதாயத்தில் அதாவது சோசலிச சமுதாயத்தில் ஜனநாயகம் என்பது உயர்ந்த வளர்ச்சியை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டிருக்கும், கிழக்கு ஐரோப்பாவில் ஜனநாயகம் என்பது மிக மிக குறைந்த அளவிலேயே காணப்பட்டது.

"நடை முறைச் சோசலிசம்" என்னும் சொற்சேர்க்கையை ஆசிரியர் பாவிப்பது ஏற்க முடியாத ஒன்று. ஏனெனில்; சோசலிசத்தை நடைமுறைப்படுத்தும் போது கிழக்கு ஐரோப்பாவில் உள்ளது போன்ற சமுதாயங்களை உருவாக்கும்; அது தவிர்க்க முடியாது என்ற கருத்தை மேற்படி சொற்சேர்க்கை கொடுக்கின்றது. அத்துடன் நடைமுறையில் சோசலிசம் கிழக்கு ஐரோப்பிய சமுதாயங்களுக்கூடாகவே - அதாவது அதே படிமுறைகளுக்கூடாகவே - கம்யூனிசமாக வளர்ச்சி அடையும் என்ற கருத்தையும் அது கொடுக்கின்றது. இச் சொற்சேர்க்கையானது சோசலிசத்திற்கான பலதரப்பட்ட பாதைகள் இருப்பதை மறுக்கின்றது. முதலாளித்துவத்தில் இருந்து முறித்துக் கொண்ட சமுதாயங்கள்; இந்தப் பாதையில் தான் செல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை.

கடைசியாக நடந்த மாற்றங்கள் வரை மேற்படி சமுதாயங்கள் சோசலிச சமுதாயங்களாக இல்லாத அதே போது; முதலாளித்துவ சமுதாயங்களாகவும் இருக்கவில்லை. ஆகவே பலருக்கு இவற்றை எவ்வாறு அழைப்பது என்ற சிக்கல் எழுவது இயல்பானதே. இந்த சமுதாயங்கள் பற்றி உறுதியான வரையறுப்புகளையும் நான் அறியவில்லை. எது எப்படி இருப்பினும் முதலாளித்துவ சமுதாயத்தில் இருந்து வேறுபட்ட; சோசலிசமும் அல்லாத கிழக்கு ஐரோப்பிய சமுதாயங்களை யதார்த்தமான ஒரு வரையறுப்புக்கு உட்படுத்தி சரியான சொற்சேர்க்கைகளின் மூலம் அழைப்பதே சிறந்தது. இந்த வகைப்பட்ட சமுதாயங்களை "புரட்சிக்கு பிந்திய சமுதாயம்" என்று போல் - எம் - ஸ்வீசி என்பவர் அழைக்கின்றார். ஆனால் இரண்டாம் உலக யுத்தத்தின் போது இடது சாரிகள் பலவீனமாக இருந்த போதும்

www.tamilarangam.net



ரஷ்ய இராணுவங்களால் பிடித்துக் கொடுக்கப்பட்ட அரசுகளே அவற்றின் சமுதாயங்களை; புரட்சி நடந்த அரசுகளாக, சமுதாயங்களாக கொள்ள முடியுமா? ரசியாவின் சமுதாயத்தை புரட்சிக்கு பிந்திய சமுதாயம் என்றோ அல்லது சீன சமுதாயத்தை அவ்வாறு அழைப்பதோ தவறாக படவில்லை. ஆனால் கிழக்கு ஐரோப்பிய சமுதாயங்களை அவ்வாறு அழைக்கலாமா? என்பது கேள்விக் குறியே. பொதுவாக "சோசலிசம்" என்று மேற் கோள் குறியிட்டு பலர் எழுதுகின்றார்கள் இது பரவாயில்லை போலும் உள்ளது.

இரண்டாவதாக ஸ்கன்டிநேவிய நாடுகளில், சமூக நலப் பண்புகள், வாழ்க்கைத்தரம் அதற்காக இடதுசாரிகளும், தொழிற்சங்கங்களும் போராடியது பற்றிய கருத்துகளை கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார். சோசலிசத்தின் சமூக நலப் பண்புகளை ஸ்கன்டிநேவிய நாடுகள் கொண்டுள்ளது என்பதைவிட; சிறந்த சமூக நலப் பண்புகளை கொண்டுள்ளது என்பதே சரியான கருத்தாக இருக்கும். கிழக்கு ஐரோப்பிய சமுதாயங்களுடன் ஒப்பிடு ஸ்கன்டிநேவிய நாடுகளை சோசலிச சமூக நலப் பண்புகள் உள்ள நாடுகளாக கருதக் கூடாது. இக்கருத்தானது சோசலிச சமூக நலப்பண்புகள் பற்றி ஆசிரியரிடம் சரியான கருத்து இல்லையோ என்ற சந்தேகத்தையே உருவாக்கின்றது.

மேலும் இன்று சுரண்டும் மேலைத் தேச நாடுகளில் காணப்படும் வாழ்க்கைத் தரத்தின் அடிப்படை மூன்றாம் உலக நாடுகளில் அவர்களின் ஏகாதிபத்திய சுரண்டலில் அடங்கியுள்ளதே அன்றி தொழில் சங்கங்களினதோ அல்லது இடதுசாரிகளினது போராட்டத்திலோ அல்ல. கிழக்கு ஐரோப்பிய சமுதாயங்களில் காணப்பட்ட ஜனநாயக உரிமைகளைவிட மேலைத் தேச ஏகாதிபத்திய நாடுகளில் ஜனநாயக உரிமை அதிகம் தான் ஆனால் அவை இடதுசாரி இயக்கங்களின் போராட்டத்திற்கூடாக சாதிக்கப்பட்டதாக கூற முடியாது.

www.tamilarangam.net



வாழ்க்கைத் தரம் என்பது மூன்றாம் உலக நாடுகளில் ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டலின் மூலம் ஏகாதிபத்திய நாட்டு மக்களுக்கு உயர்ந்ததாக காணப்படுகிறது. ஜனநாயகம் என்பது முதலாளித்துவ சமுதாயத்தின் இயக்கத்திற்கு எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு தூரம் காணப்படுகின்றது. எந்த ஒரு போராட்டமும் இல்லாமல் முதலாளிகள் உரிமைகளையோ அன்றி சிறந்த வாழ்க்கைத் தரத்தையோ தாமாக கொடுப்பார்கள் என்று நான் கூறவரவில்லை. ஆனால் இவர்களுடைய சீர்திருத்த வாதப் போராட்டங்கள்தான் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அடிப்படை என்பதை ஏற்க முடியாது, என்பதே என் கருத்து.

மூன்றாவது பிரச்சனை Civil Socity என்ற சொற் சேர்க்கை சம்பந்தப்பட்டது. Civil Socity [சிவில் சமுகம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.] என்ற கருத்தாக்கம் அன்டனியோ கிராம்சி என்ற இத்தாலி நாட்டைச் சேர்ந்தவரால் உருவாக்கப்பட்டது. இன்னொருவரது கருத்தாக்கத்தை உபயோகிக்கும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். அவரது கருத்தை மாற்றாமல் வியாக்கியானம் செய்வதுடன், சம்பந்தப்பட்ட கருத்துடன் எமக்குள்ள உடன்பாடு, முரண்பாடுகளை சரியாக வரையறுத்துக் கொள்ள வேண்டும். சிவில் சமுகம் என்ற கருத்தாக்கத்தை தனியே அவரது கருத்தாக்கத்தில் இருந்து பிரித்தெடுத்து புரிந்து கொள்வதும் கடினம்.

(1) சிவில் சமுகம் - civil socity (2) மேலாண்மை - Hegemoney

(3) வரலாற்று கூட்டு - Historic Block

(4) ஒருங்கிணைந்த புத்தி ஜீவி - Organic Intellectuval

போன்றவை அவரது கருத்தாக்கங்களை. ஆகவே மேலே கூறப்பட்ட அவரது ஏனைய கருத்தாக்கங்களுக்கும், சிவில் சமுகம் என்ற அவரது கருத்தாக்கத்திற்கும் இடையில் உள்ள தொடர்பை வைத்தே சிவில் சமுகம் என்ற கருத்தை முழுமையாக புரிந்து கொள்ள முடியும்

www.tamilarangam.net



இருந்த போதும் கட்டுரையாளர் எடுத்த பிரச்சனைக்குள் வைத்தே சிவில் சமூகம் என்ற கருத்தை நாம் பார்ப்போம்.

எந்த ஒர் அரசின் நேரடி ஆதிக்கத்தில் இருந்து விலகி நிற்கும் அமைப்புகளும் சுயாதீனமாக இயங்குவதாக கொள்ள முடியாது. அவ்வாறு ஒருவர் கருதுவாராயின் அக்கருத்து இயங்கியலுக்கு முரணானது. அரசு என்பது இருக்கும் வரை எந்த ஒரு சமுதாயத்திலும் அரசுக்கும் அதில் இருக்கும் அமைப்புகளுக்கும் இடையில் உறவு நிலவுகின்றது. சில சமுதாயங்களில் இறுக்கமாக இருக்கின்றது. சில சமுதாயங்களில் மிகவும் தளர்வாக நிலவுகின்றது. ஆகவே civil socity என்ற சொல்லுக்கு சுயாதீன சமூகம் என்ற சொல் பொருத்தமானது அல்ல. ஏனெனில் அரசை விட்டு சுயாதீனமாக இயங்கும் நிறுவனங்களை ஆசிரியர் கருத்தில் கொண்டுள்ளார். அதனாலேயே civil socity என்பதற்கு ஏற்கனவே பாவனையில் உள்ள சிவில் சமூகம் என்ற சொல்லை பாவிப்பது சிறந்தது என கருதுகிறேன்.

சிவில் சமூகம் என்றால் சமூக உறவுகள் என்றும் மேல் கட்டுமானத்தின் பகுதி தான் என்றும்; அந்த சமூக உறவுகளை மூவகையாகப் பிரிக்கலாம் என்றும் சொல்கிறார்கள். மூவகை சமூக உறவுகளாவன

1. உற்பத்தியோடு இணைந்த உறவுகள் - இவை முதலாளி தொழிலாளி உறவையோ, நிலப்பிரபுவத்துவ பண்ணையடிமை உறவையோ, அல்லது கிழக்கு ஐரோப்பிய சமுதாயத்தில் நிலவிய அதிகாரிகள்-உழைக்கும் மக்கள் உறவையோ அது சம்பந்தப்பட்ட நிறுவனங்களையோ குறிக்கும்.
2. ஒடுக்கு முறை உறவுகள்: அரசும் அரச இயந்திரமும்.
   உ+ம்: பொலிஸ், இராணுவம், சிறைச்சாலை, நீதித் துறை----
3. தனியார் உறவுகள்: மேற்குறிப்பிட்ட இரண்டையும் தவிர்ந்த மதம், தொழிற் சங்கம், கலாச்சார நிறுவனங்கள், சில அரசியல் கட்சிகள்

www.tamilarangam.net



போன்றவற்றால் உருவாக்கப்படும் உறவுகள். இதில் கல்வி நிறுவனங்களும் அடங்கும்.

இந்த மூன்று வகை உறவுகளிலும் மூன்றாம் வகை உறவுகளின் தொகுப்பே சிவில் சமூகம் என்பதாகும். ஏற்கனவே குறிப்பிட்டபடி அரசின் **நேரடி ஆதிக்கத்தை** தவிர்ந்த பொருளாதார, சமூக கலாச்சார நிறுவனங்கள் நிலவ முடியும். ஆனால் அவை முற்று முழுதான சுயாதீனத் தன்மை உடையனவாக அரசு நிலவும் வரை இருக்க முடியாது. மேலும் ஆசிரியர் குறிப்பாக பொருளாதார கலாச்சார சமூக செயற்பாடுகள் அனைத்தையும் சிவில் சமூகம் என்ற ஒரே கருத்தாக்கத்திற்குள் உள்ளடக்க முனைவதுடன் உடன்பட முடியாது.

பொருளாதார செயற்பாடுகள் சமுதாயத்தின் உற்பத்தி முறையுடன் சம்பந்தப்பட்டது. பொருளாதார செயற்பாடுகளும் அதன் நிறுவனங்களும் மேலே குறிப்பிட்ட உற்பத்தி உறவுகள்; அதன் நிறுவனங்கள் என்ற பிரிவுக்குள்ளேயே அடங்குகிறது. சிவில் சமூகம் என்ற கருத்தாக்கத்திற்குள் அது அடங்கமாட்டாது. சிவில் சமூகத்தில் நிலவும் நிறுவனங்களுடன் அவை தொடர்புடையனவாக இருந்த போதும்; பொருளாதார நிறுவனங்களும் உறவுகளும் தமக்கே உரிய பண்புகளை கொண்டுள்ளன. ஆனால் சமூக கலாச்சார செயற்பாடுகள் என்பவற்றை சிவில் சமூகம் என்ற கருத்தாக்கத்திற்குள் அடக்கலாம். பொருளாதார நிறுவனங்களுக்கும், சமூக கலாச்சார நிறுவனங்களுக்கும் இடையிலான உறவு இயங்கியல் ரீதியானது. ஏற்கனவே குறிப்பிட்டுள்ள மூன்று வகையான உறவுகளையும் அவை தம்மிடையே கொண்டுள்ள உறவுகளையும் இயங்கியல் ரீதியாக புரிந்து கொள்ள வேண்டும்.

ஆசிரியர் குறிப்பிடுகின்றார் முதலாளித்துவ சமுதாயத்தில் தனியார் துறை எனப்படும் பொருளாதார உற்பத்தி, சந்தைப்படுத்தல் போன்றவை சிவில் சமூகத்தின் அடிப்படை என்று. அது தவறு. அது முதலாளித்துவ அமைப்பு முறையின் அடிப்படையே தவிர சிவில் சமூகத்தினது அல்ல.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேலும் சிவில் சமூகத்திற்கும், பொருளாதார உற்பத்தி சந்தைப்படுத்தலுக்கும் இடையிலான உறவு ஆசிரியர் குறிப்பிடும் வகைப்பட்டதல்ல.

ஒரு சமுதாயத்தில் சிவில் சமூகம் என்பது பலமானதாக இருக்கும் போது அதுவே அந்த சமுதாயத்தை கொண்டு இயக்குவது போல் தென்படும். அரசு அந்த சிவில் சமூகத்திற்கு பின் மறைந்து நின்று செயல் படும். அந்த குறிப்பிட்ட சமுதாயத்தின் சிவில் சமூகம் அம்பலப்படுத்தப்பட்டு செயலிழந்து போகும் போது அரசு என்பது தனது கோரமுகத்தை காட்டிக் கொண்டு வெளியே வரும். சரியாகச் சொன்னால் சிவில் சமூகம் என்பது ஒரு சமுதாய அமைப்பு முறையை; அதன் அரசை காப்பாற்றும் சமூக கவசச் சார நிறுவனங்களை கொண்டது என்பது மிக பொருத்தமானதாக இருக்கும். அரசின் அதிகாரங்கள் உச்ச நிலையில் உள்ள போது சிவில் சமூகத்தின் நிறு வனங்கள் பலமிழந்து போயுள்ளதாகவே கொள்ள வேண்டும். மாறாக சிவில் சமூகம் என்பது மறைந்து போய்விட்டதாக கொள்ளக் கூடாது. இதற்கு மிக சிறந்த உதாரணமாக எமது நாடான இலங்கையை எடுத்துக் கொள்ளலாம். பாசிசத்தனமான அரசும் அதன் நிறுவனங்களும் சகல அதி காரங்களையும் கொண்டுள்ளது. சிவில் சமூகத்திற்கான நிறுவனங்கள் பலவீனமாக இருக்கின்றன. இருந்த போதும் சிவில் சமூகத்தின் நிறுவனங்கள் இன்னும் அங்கே நிலவுகின்றன. எமது நாட்டில் நிலவும் சிவில் சமூக அமைப் புகளாவன ÷ தொழிற் சங்கங்கள், மத நிறுவனங்கள், பாராளுமன்றம், அரசியல் கட்சிகள், பிரஜைகள் குழுக்கள் .... என்பவற்றை குறிப்பிடலாம். தமிழ் பகுதிகளில் இன்னும் சிவில் சமூகம் பலமிழந்து போயுள்ளது.

இதே போல் கிழக்கு ஐரோப்பிய சமுதாயங்களிலும் சிவில் சமூகம் என்பது இருந்தது. ஆசிரியர் குறிப்பிடுவது போல் சிவில் சமூக த்திற்கான போராட்டமாக அங்கே நடந்த போராட்டம் இருக்கவில்லை. அங்கே நடந்த போராட்டம் இருக்கும் சமுதாய நிலைமைகளை மாற்றியமை க்க நடந்த போராட்டமேயாகும். இருக்கும் சமுதாய நிலைமைகளை

www.tamilarangam.net



மாற்றியமைக்கும் போராட்டத்தில் எப்போதுமே உற்பத்தியோடு இணைந்த உறவுகளும், ஒடுக்குமுறை உறவுகளுமே தெளிவாக, எதிராக தம்மை காட்டிக் கொள்வதால் அவையே முதலில் மாற்றியமைக்கப்படும். இரண்டாவது வகையான சிவில் சமூகத்திற்கு எதிரான போராட்டம் என்பது படிப்படியாகவே நடைமுறைப்படுத்தப்பட்டு சிவில் சமூகம் என்பது மாற்றியமைக்கப்படுகிறது. மேலும் சிவில் சமூகம் என்பது இருக்கும் சமுதாய அமைப்பை கட்டிக்காக்க உருவாக்கப்படுவதால்; அரசு என்பது நிலவும் வரை சிவில் சமூகத்தை உருவாக்குவதற்கான போராட்டம் என்பது முதன்மை பெறாது. அதாவது சமுதாய நிலமைகளை தெளிவாக காட்டும் உற்பத்தி முறையையும் அரசையையும் மாற்றியமைப்பதற்கான போராட்டத்திற்கு பின்னிலையில் சிவில் சமூகத்திற்கான போராட்டம் இருக்கும். அத்துடன் சிவில் சமூகத்தை உருவாக்குவதில் அதாவது தனக்கு தகவமைந்த முறையில் உருவாக்குவதில் அரசும், சமுதாயத்தின் ஆதிக்க சக்திகளும் பாடுபடும்.

அரசும் சிவில் சமூகமும் பரஸ்பரம் ஒன்றை ஒன்று செயல் புரிந்து! இருக்கும் சமுதாய அமைப்பை காப்பதற்கே செயல்படும். அரசிலும் சிவில் சமூகத்திலும் அங்கம் வகிக்காத நிறுவனங்களே சமுதாயத்தில் மாற்றத்தினை – இங்கே குறிப்பிடுவது புரட்சியை – உருவாக்க முடியும். அராஜகத் தன்மை கொண்ட அமைப்புகள் சில வேளைகளில் அரசிலும், சிவில் சமூகத்திலும் அங்கம் வகிக்காமல் இருப்பதுண்டு. இவற்றால் மனித குலத்திற்கு காத்திரமான பங்கை ஆற்ற முடியாது. நான் குறிப்பிடுவது இந்த வகையை அல்ல. அரசினை நடத்தும் அல்லது அதில் அங்கம் வகிக்கும் ஓர் நிறுவனம் – அது கட்சியாகக் கூட இருக்கலாம் – தனக்கு தகவமைந்த சிவில் சமூகத்தை உருவாக்கவே பாடுபடும். ஆகவே அது தொடர்ச்சியாக புரட்சிகளை சாதிக்கமாட்டாது. அதே போல் சிவில் சமூகத்தில் அங்கம் வகிக்கும் ஒரு நிறுவனமும் சமுதாயத்தை புரட்சிகரமாக மாற்றியமைப்பதில் காத்திரமான பங்கை ஆற்ற முடியாது. நிலவும் அரசுக்கும், நிலவும் சிவில் சமூகத்திற்கும் எதிராக எந்த

47ம் பக்கம் →

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






சுகின், பிரான்ஸ்.

ஆசிரியர் தலையங்கத்தில் "தமிழ் மக்களிடையே உள்ள குறுந்தேசிய உணர்வு, அதனைப் பிரதிநிதித்துவப்படும் அமைப்புகள்" என்ற வார்த்தைப் பிரயோகம் இன்றைய நிலையில் எனக்கு எரிச்சலூட்டுகிறது. குறுந்தேசிய வெறியையும் கடந்து பாசிசத்தின் பேயாட்டம் நடத்தப்படும்போது பாசிசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளை குறுந்தேசிய வாதத்துள் மட்டும் மட்டுப்படுத்தி நோக்குவது அபத்தம். போதைப் பொருட்கள் ஏஜென்டுகளுக்கும் மக்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

« குறுந்தேசிய உணர்வை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளின் 'பாசிச' கட்டத்தை அடைந்திருக்கிறதே ஒழிய பாசிசத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்புகளாகப் பார்க்க முடியாது. ஏனெனில் 'பாசிச' கட்டம் நீக்கினாலும்கூட இவ் அமைப்புகள் இதே குறுந்தேசிய வாத உணர்வை பயன்படுத்தி வளர்வதை தெளிவாக கண்டுகொள்ளலாம். » - ஆ.ர் குழு -

மேலும் தங்களின் 'தனக்குள் வாழும் இன்னோர் சமூகத்தின்' என்ற வார்த்தைப் பிரயோகம் தமிழ் மேலாதிக்க வாதத்தின் பாதிப்பின்பாற்பட்டதே!

« மேற்படி வார்த்தைப் பிரயோகம் எமது கவனக்குறைவால் ஏற்பட்டதே. 'தனக்குள்' என்பது 'தன்னுடன்' என வந்திருக்க வேண்டும். இது தமிழ் மேலாதிக்க வாதத்தின் பாதிப்பின்பாற்பட்டதல்ல. இதனை கட்டுரையின் பொருண்மை அடிப்படையில் பார்த்திருந்தால் இது வார்த்தைப் பிரயோகத்தின் தவறு என்பதை எளிதில் புரிந்திருக்க முடியும். » - ஆ.ர் குழு -

www.tamilarangam.net



பிறேர்குலம், யேர்மனி.

சர்வதேச விடயங்களை வெளிக்கொண்டு வருவதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் 'மனிதம்' என் எமது நாட்டில் உறங்கிக் கொண்டிருக்கிற பல நிகழ்வுகளை வெளிக்கொண்டு வருவதில்லை.

« ஒவ்வொரு மனிதம் இதழும் எமது நாட்டில் உறங்கிக்கொண்டிருக்கிற நிகழ்வுகளை 'மனிதம்' பல ஆக்கங்களுடாக வெளிப்படுத்தி வருகிறது. குறிப்பாக ஆசிரியர் தலையங்கம் கவிதைகள்... போன்றவற்றில் இதனைக் காணலாம். »

- ஆ.கு -

வாசகன், இலங்கை.

இன்று இலங்கையில் அதிகமாக பாதிக்கப்படுவது முஸ்லிம்கள்தான் (உ+ம் காத்தான்குடி, ஏறாவூர் சம்பவம்). இந்த கொடூரங்களைப் புரிந்தது இயக்கமா? அரசா? எதுவும் புரியவில்லை. நாட்டு மக்கள் இன்று அமைதியையும் அகிம்சையையும்தான் எதிர்பார்க்கிறார்கள் - அது ஒரு சுபீட்சமான வாழ்வுக்கு வழிவகுக்காதா என்று!

---

◄ 45ம் பக்கம்

நிறுவனம் போராடுகின்றதோ அந்த நிறுவனத்தால் மட்டுமே ஒரு சமுதாயத்தை புரட்சிகரமாக மாற்றியமைக்க முடியும். மேலும் இந்த அமைப்பானது நிலவும் சிவில் சமூகத்தையும், அரசையும் எதிர்ப்பதாக மட்டும் இராது சமுதாயத்தில் நிலவும் முரண்பாடுகளை இயங்கியல் ரீதியாகப் புரிந்து கொண்டு சமுதாயத்தை மாற்ற அமைக்கும் நோக்கிலும் செயல்பட வேண்டும்.

- குணபாலன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தென்னாப்பிரிக்கா: கருப்பினத்தவரிடையே மோதல்

நன்றி : புதியஜனநாயகம்



தென் ஆப்பிரிக்காவின் ஜோஹென்ஸ்பர்க் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் கருப்பின மக்களிடையே நடந்த கலவரங்களில் 700 பேர் கடந்த ஆறு வாரத்தில் இறந்துள்ளனர். கடந்த ஜூலை மாதத்திலிருந்து ஷோசா மற்றும் ஜூலு இனப் பழங்குடியினர் இருபிரிவாகப் பிரிந்து நிற்பதும், இரு இனத்தின் தீவிரவாதிகள், இனப்பற்றுள்ள இளைஞர்கள் ஒருவருடன் ஒருவர் மோதிக்கொண்டு இனப்படுகொலை புரிவதும் தொடர்கிறது. ஆப்பிரிக்க சமுதாயத்தில் கருப்பின பழங்குடி மக்கள் நூற்றுக்கணக்கான வர்ண இனங்கள் அடிப்படையில் பிரிந்து இருந்தாலும் இனப்பகைமை உணர்வும், இனமோதல்களும் பழங்காலந் தொட்டு நிலவி வந்தாலும் தற்போதைய அளவிற்கு இனக் கலவரமாக வெடித்ததில்லை.

உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்குமளவிற்கு நிறவெறி மற்றும் காலனி ஆதிக்கத்திற்கு எதிரான வீரதீர மிக்க போராட்டங்களை நடத்தியவர்கள் கருப்பின பழங்குடி மக்கள். இன வேறுபாடின்றி ஒன்றுபட்டு தேசிய - இன விடுதலைப் போராட்டத்தை நடத்தி மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தவர். இவர்கள் இன்று இன அடிப்படையில் மோதிக் கொள்வதற்கு என்ன காரணம்?

ஷோசா, ஜூலு என்ற இரு பழங்குடி இனத்தவர்களே தென்னாப்பிரிக்காவில் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். ஷோசா இன மக்கள் மாண்டேலா தலைமையிலான ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் (ஆ.தே.கா) அமைப்பில் பெருவாரியாக உள்ளனர். ஜூலு இனப் பழங்குடியினரைப் பெரும்பான்மையாகக் கொண்டு செயல்பட்டு வரும் அமைப்பு இங்கதா இயக்கம். இதன் தலைவர் மங்கோசுது புத்திலேசி. இவர் 1970-லேயே தென்னாப்பிரிக்க நிறவெறி அரசுடன் சமரச உடன்படிக்கை செய்து கொண்டார். அப்பொழுதே ஜூலு இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் "அரசுடன் சமரசமானவர்கள் எவரும் கைக்கூலிகளே - துரோகிகளே" என கடுமையாக எதிர்த்தனர். மேலும் இங்கதா இயக்கம் கருப்பின மக்களுக்கான உரிமை - விடுதலைப் போராட்டத்தில் மிதவாதத்தைக் கடைபிடித்து செயல் குறைந்து சுணங்கிக் கிடந்தது. இன்னொருபுறம் மாண்டேலா தலைமையிலான ஆ.தே.கா. ஆயுதப் போராட்டத்தில் ஊன்றி நின்று தீவிரமாக செயலாற்றியது. உலக நாடுகளை தென்னாப்பிரிக்க நிறவெறி அரசுக்கு பொருளாதார தடை விதிக்கக் கோரி ஆ.தே.கா. அறைகூவல் விடுத்தபொழுது புத்திலேசி இதை எதிர்த்தார். இதனாலும் ஜூலு இனத்தவர் மத்தியிலேயே செல்வாக்கு இழந்து போனார் புத்திலேசி.

எண்ணற்ற ஜூலு இன இளைஞர்கள் இங்கதா இயக்கத்தைப் புறக்கணித்து வெளியேறி ஆ.தே.கா.-வின் போராட்டங்களில் பங்கெடுத்தனர். ஆ.தே.கா., ஷோசா இன மக்களை பெரும்பான்மையாகக் கொண்டும் ஷோசா இனத்தினரையே தலைவர்களாகக் கொண்டும் இயங்கி வந்தாலும் இன வேறுபாடின்றி நிறவெறி அரசின் சுரண்டலுக்கும், அடக்குமுறைக்கும் உள்ளான அனைத்து கருப்பின மக்களின் விடுதலைக்காக குரல் கொடுத்து வந்தது. இதனால் ஆ.தே.கா.வின் போராட்டத்தில் ஜூலு இனத்தவர் மட்டுமல்லாமல் பிற இனப் பழங்குடி மக்களும் இணைந்தனர். ஜூலு இன இளைஞர்கள் ஆ.தே.கா.-வில் இணைவதை தடுக்க மிரட்டல், பலாத்கார தாக்குதல் முதலானவைகளை கையாண்டார் புத்திலேசி. இதிலிருந்தே ஆ.தே.கா.-விற்கும், இங்கதா இயக்கத்திற்கும் இடையிலான பகைமையும் மோதலும் தொடங்கி நீறுபூத்த நெருப்பாக இருந்தது.


கருப்பின மக்களின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மாண்டேலா தென்னாப்பிரிக்க மக்களின் மனதில் சிறந்த தலைவராக நீங்கா இடம் பெற்றவர். தனது 27 ஆண்டு கால சிறை வாசத்திலும் விடுதலை உணர்வு குன்றாது உறுதியுடன் திகழ்ந்து உலக அளவில் புகழ் பெற்றார். தொடர்ச்சியான உள்நாட்டு விடுதலைப் போராட்டம் மற்றும் உலக நாடுகளின் பொருளாதார தடைகளால் நிலைகுலைந்து போன தென்னாப்பிரிக்காவின் பொருளாதாரத்தை சீர்படுத்துவதற்கு வெள்ளை நிறவெறி அரசுக்கு அவகாசம் தேவைப்பட்டது. மேலும் நிறவெறி ஆதிக்கத்திற்கு எதிரான கருப்பின மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தினால் உலகளவில் அம்பலப்பட்டுப் போனதாலும் மாண்டேலாவை விடுதலை செய்யக் கோரி உலகளவில் வந்த நிர்ப்பந்தத்தினாலும் தென்னாப்பிரிக்க அரசு ஜனநாயக வேடம் போட வேண்டியிருந்தது. இதனாலேயே கடந்த பிப்ரவரி மாதம் மாண்டேலாவை விடுதலை செய்தும், மாண்டேலா தலைமையிலான ஆ.தே.கா. மற்றும் இதன் கூட்டு அமைப்புகள் மீதிருந்த தடையை நீக்கியும் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு பேச்சு வார்த்தைக்கு வருமாறும் அழைத்தார் தென்னாப்பிரிக்க அதிபர் டி கிளர்க். "ஆயுதப் போராட்டத்திற்கான அடிப்படை இன்னும் நீடிக்கிறது. எனவே பேச்சுவார்த்தை, ஆயுதப் போராட்டம் இரண்டையும் தொடர்வோம்" என்று கூறினார் மாண்டேலா. ஆனால் சமீபத்தில் 1500 அரசியல் கைதிகளை (கருப்பின விடுதலைப் போராளிகள்) விடுவிக்க வேண்டும்; வெளிநாடுகளிலுள்ள 20,000 கருப்பின மக்களை திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை விதித்து ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைப்பதாக ஒத்துக் கொண்டு அரசுடன் ஒப்பந்தம் போட்டுள்ளார்.

ஆ.தே.கா.வின் கொரில்லாப் படை மற்றும் பிற குழுக்களில் உள்ள தீவிரமான இளைஞர்கள் மாண்டேலாவின் ஒப்பந்தத்தை - ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைப்பது - ஒட்டி அதிருப்தி அடைந்தனர். இதனால், "ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதன் மூலம் அதற்கான அடிப்படை நீங்கிவிட்டது என்று அர்த்தமில்லை; இது ஒரு வகை தந்திரமே" என்று தனது மனைவி வின்னி மாண்டேலா மூலமும், "ஆயுதப் போராட்டம் தொடர்ந்து நடக்கும். வீரர்களே பதுங்கு குழிகளில் எப்பொழுதும் தயாராகக் காத்திருங்கள்!" என்று தனது அமைப்பு கொரில்லாப் படையின் தலைமைப் போராளி கிரிஸ் ஹனி மூலமும் அறிக்கை விட்டார் மாண்டேலா. தொலைபேசி பேட்டி ஒன்றில் நிருபர்கள் ஒப்பந்தத்தைப் பற்றிக் கேட்டபொழுது "இது ஒரு வகையான உடன்படிக்கை" என்று மட்டுமே கூறி நழுவிக் கொண்டார் மாண்டேலா.

மாண்டேலாவின் ஊசலாட்ட போக்கை கருப்பின விடுதலைக்காகப் போராடும் பிற அமைப்புகளும், குழுக்களும் கடுமையாக எதிர்க்கின்றன. பான் - ஆப்பிரிக்கன் காங்கிரசின் தலைவர் பர்வே தேசாய் "ஆ.தே.கா.வும் அதன் கூட்டாளி கம்யூனிஸ்டுகளும் (ரஷ்ய அடிவருடிக் கட்சி) விடுதலைப் போராட்டத்தை தலைமுழுகுகிறார்கள். வெள்ளை இன வெறியர்களுடன் அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்ள ஓடிக் கொண்டிருக்கிறார்கள்" என்று கூறுகிறார். ஆ.தே.கா.-விற்கு ஆதரவு தெரிவித்து வந்த சேரிப்பகுதி இளைஞர்களும் பல்கலைக் கழக மாணவர்களும் 'இன்று ஆயுத போராட்டப் பாதையில் நின்று போராடும் பான் - ஆப்பிரிக்கன் காங்கிரசு மற்றும் அசானியன் மக்கள் அமைப்பை நோக்கிச் செல்வதும் நடக்கிறது.

www.tamilarangam.net





மண்டேலாவுடன் கை குலுக்கும் டி கிளர்க்; வெள்ளை நிறவெறியனின் மனம் மாறிவிட்டதா?

மேலும், ஜோஹனெஸ்பர்க் மற்றும் இதனைச் சுற்றியுள்ள நகர்ப்புறங்களில் வசித்துவரும் கருப்பின பழங்குடி மக்களில் தனது ஷோசா இனத்திற்கு மட்டும் அரசிடம் இருந்து சில சலுகைகளைப் பெற்றுத் தந்துள்ளார் மாண்டேலா. இதனால் ஒதுக்கப்பட்ட ஜூலு இனத்தினர் மாண்டேலா மீது வெறுப்படைந்து உள்ளனர்.

இத்தருணத்தைப் பயன்படுத்தி இங்கதா இயக்கத்தை வளர்க்கத் திட்டமிட்டார், புத்திலேசி. ட்ரான்ஸ்வால் பகுதியில் பலவந்தமாக தமது இயக்கத்திற்கு ஆள்சேர்க்க முற்பட்டார். இச்செயல் ஏற்கனவே இருந்த பகைமையுணர்வை வளர்த்தது. சேபோகெங் என்ற நகரத்தில் ஜூலை 22ந்தேதி இங்கதா இயக்கம் ஊர்வலம் நடத்திய பொழுது விட்வாட்டர்ஸ் ராண்டு பகுதியில் இரு இனத்தினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்தே இனக்கலவரம் பற்றியெறிந்தது.

ஜூலு இனத்தினர் வசிக்கும் விடுதிகளை - சேரிப்பகுதிகளை ஆ.தே.கா.-வினரும் ஷோசா இனத்தினர் வசிக்கும் சேரிப்பகுதிகளை இங்கதாவினரும் தாக்கி-குடியிருப்புகளை தீக்கிரையாக்கியும், அப்பாவி மக்களை நிராதரவாக அடித்து விரட்டியும்—தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள படையெடுக்கின்றனர்.

இங்கதா இயக்கம் தனது செல்வாக்குள்ள நேட்டால் பகுதியில் இதற்கென ஆயுதப் பயிற்சியெடுத்து வருகிறது. ''ஜூலு இனத்தினர் இங்கதாவில் இல்லாவிட்டாலும் இங்கத்தாவினரே: ஷோசா இனத்தினர் ஆ.தே.கா-வில் இல்லாவிட்டாலும் ஆ.தே.கா-வினரே'' என்று கூறி தாக்கிக் கொள்கிற அளவிற்கு இனக் கலவரம் உக்கிரமடைந்து உள்ளது.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது போல் நிறவெறி ஆதிக்கத்திற்கு எதிராக போராடிய மக்கள் இன்று இனவெறி அடிப்படையில் பிரிந்து மோதிக் கொள்வதை தமக்கு சாதகமாக்கிக் கொண்டன, வெள்ளை நிறவெறி அமைப்புகளும் அரசும். வெள்ளை நிறவெறியையும், கருப்பினப் படுகொலையையுமே லட்சியமாகக் கொண்ட டாக்டர் அன்ட்ரிஸ் ட்ரெனிசிஸ் கன்சர்வேட்டிவ் பார்ட்டி மற்றும் ஆப்பிரிக்கர் (கலப்பினத்தவர்) பாதுகாப்பு இயக்கம் முதலான அமைப்புகள் இன்று தமது கொலைக் கரம் உயர்த்தி வெறியாட்டம் போடுகின்றன. கருப்பினத்தவர் போல் அரிதாரம் பூசிக் கொண்டும் முகமூடி அணிந்து கொண்டும் ஷோசா மற்றும் ஜூலு பழங்குடியினர் வசிக்கும் விடுதிகளிலும் சேரிப்பகுதிகளிலும் புகுந்து தாக்கி இனமோதலை தீவிரமாக்கியது வெள்ளை நிறவெறிக் கும்பலே. இன்னும் இங்கதா அல்லது ஆ.தே.கா. அமைப்பிற்குரிய அடையாளங்களுடன் கருப்பின மக்களை படுகொலை புரிகின்றனர். அண்மையில் - செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் ரயிலில் நடந்த இனப் படுகொலையே இதற்கு இரத்த சாட்சி.

ஜோஹனெஸ்பர்க் ஜேப்பி நிலையத்திலிருந்து புறப்பட்ட ரயிலில் கருப்பின மக்களுடன் கருப்பினத்தவர்களாக வேடமிட்ட ஆறு வெள்ளை நிறவெறியர்கள் ஆயுதங்களை மறைத்துக் கொண்டு பயணம் செய்தனர். ரயில் அடுத்த பென்ரோஸ் நிலையத்தை அடைவதற்குள் 10 நிமிடமாக நிறவெறிக் கும்பல் கருப்பின மக்கள் மீது காட்டுமிராண்டித் தனமாக சுட்டது: அப்பாவி மக்களின் அங்கங்களை வெட்டி கதவின் வழியே வீசியெறிந்தது. நிலையத்தில் காத்திருந்த இன்னொரு நிறவெறிக் கும்பல் மீண்டும் கருப்பின மக்கள் மீது பாய்ந்து குதறியது. பென்ரோஸ் நிலையத்தில் கதவை திறந்ததும் இரத்தமும், இரத்தம் உறைந்த உடல்கள் மட்டுமே கொட்டின. தென்னாப்பிரிக்க அரசு செய்திப்படி இறந்தவர்கள் 26 பேர்: காயமுற்றவர்கள் 100 பேர்.

இப்படுகொலை கருப்பினத்தவர் இடையிலான மோதலே என முதலில் சித்தரித்த தென்னாப்பிரிக்க அரசு பின்னர், இப்படுகொலையை செய்தது வெள்ளை நிறவெறியர்களே என்பது ஆதாரங்களுடன் வெளிவர ஆரம்பித்ததும் வாயடைத்துப் போனது. வெள்ளை நிறவெறி அமைப்புகள் தென்னாப்பிரிக்க அரசின் போலீசு, ராணுவம், நீதிபதிகளின் 70 சதவிகித ஆதரவுடன் செயல்பட்டு வருகின்றன. கருப்பின மக்களின் மீதான அனைத்து தாக்குதலையும் தென்னாப்பிரிக்க அரசின் உதவியுடனே இவ்வமைப்புகள் நடத்துகின்றன. கருப்பினத்தவர்களிடையே இன மோதல்களை - பகைமை உணர்வை அப்பட்டமாக நேரடியாக தூண்டிவிட்டு ஆதாயமடைந்தான் பாசிச நிறவெறியன் போத்தோ. ஆனால் இன்று - மான்டேலாவுடன் பேச்சு வார்த்தை என ஜனநாயக நாடகமாடி வரும் தருணத்தில் - அதே வடிவத்தில் தாக்குதல் தொடுக்க முடியாமல் போகவே இதுபோன்ற வெள்ளை நிறவெறி அமைப்புகளை திரை மறைவில் தூண்டிவிட்டு ஆதாயம் தேடி வருகிறார் டி.கிளார்க்.

ஏகாதிபத்தியங்கள் தமது சுரண்டலையும், ஆதிக்கத்தையும் நிலைநிறுத்திக் கொள்வதற்கு ஒரே நடைமுறையை - வடிவங்களை கடைப்பிடிப்பதில்லை. மேலும் மேலும் அம்பலப்பட்டுப்போய் மரணத்தின் வாயிலருகே நிற்பதால் பல புதிய வடிவங்களில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள முயலுகின்றன. தமது காலனி - அரைக்காலனி - நவகாலனித்துவ நாடுகளில் நடக்கும் தமக்கு எதிரான போராட்டங்களை பேச்சு வார்த்தை, சலுகை, அதிகாரப் பகிர்வு முதலானவைகள் மூலம் தீர்த்துக் கொள்ள முன்வருவதற்கும் இதுவே காரணம். போராளிகளையும் போராட்ட அமைப்புகளையும் தமது அங்கமாக நிறுவனமயமாக்கும் நோக்கத்திலேயே இப்படி முன்வருகின்றன. அதே சமயம், இன்னொருபுறம் போராளிகளிடையே தனது அடிவருடிகள், அடிவருடி அமைப்புகள் மூலம் பிளவை, மோதலை ஏற்படுத்துகின்றன அல்லது பெரிதாக்குகின்றன: இவற்றையே காரணமாக வைத்து மீண்டும் தனது அடக்குமுறையை, தாக்குதலை தொடுக்கின்றன. இதற்கு ஆங்கில ஏகாதிபத்தியமும் விதிவிலக்கல்ல. நிறவெறி பாசிஸ்டு போத்தா அம்மணமானபின் அடுத்து ஜனநாயகம், முற்போக்கு என்ற வேடத்தில் டி கிளர்க்கை நிறுத்தியிருக்கிறது. தோற்றமும் அணுகுமுறையும் வேறாகத் தெரிந்தாலும் உள்ளடக்கமும் நோக்கமும் ஒன்றே.

நிறவெறிக்கும், இனவெறிக்கும் எதிராக போராடிவரும் தென்னாப்பிரிக்க கறுப்பின மக்கள் பெருவாரியாக பல குட்டி முதலாளித்துவ அமைப்புகளின் பின்னேயே அணிதிரண்டு இருக்கின்றனர். தேசிய - இன விடுதலையை குட்டி முதலாளித்துவ தலைமையின் கீழ் சாதிக்க முடியும் என்றாலும் அவை உலக கண்ணோட்டம் - மார்க்சிய லெனினிய கண்ணோட்டம் பெற்றிருக்கும் பொழுதே ஏகாதிபத்தியங்களின் சதிகளை முறியடித்து முன்னேற முடியும். கறுப்பின மக்கள் இன அடிப்படையில் மோதிக் கொள்வதை விடுத்து பரஸ்பரம் பேச்சு வார்த்தை மூலம் ஐக்கியப்படுவதும், உலக கண்ணோட்டம் பெறுவதும் வேண்டும்; இதற்காக தமது தலைமையை நிர்பந்திக்கவும் வேண்டும்; இதுவே இன்றுள்ள கடமை.


◆ ராசு.

www.tamilarangam.net



# றெக்கே இசையும்

ஆங்கிலத்தில்: ரீகுஜா பொருஸ்



தமிழில்: தேவா (சுவிஸ்)

# பொப்மாலியும்

## றெக்கே இசையில் ரஸ்தபாரியன்களின் தாக்கம்:

கிங்ஸ்ரன் நகரக் காடுகளில் வசிப்பவர்களது சரித்திரம் பல நூற்றாண்டுகளாக அடிமை வாழ்வு, காலனித்துவ ஆட்சி, நவகாலனிய "நவீனமயப்படுத்தல்", ....... என்று தொடர்கிறது. இந்த ஒவ்வொரு ஒடுக்குமுறைவடிவங்களும், கிறிஸ்தவ பாதிரிமார்களின் அங்கீகார முத்திரையுடனே நடந்து வந்துள்ளது. இதற்குச்சான்றாக "The Hearder they Come" என்ற படமும் விளங்குகிறது.

அடக்கப்பட்ட மக்கள் தங்களிடமிருந்து எந்த சமயத்தையும் தேர்விக்கிடமில்லாமல், பரிசுத்தமாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்று கோரியவர்களுக்கு எதிராக போராடகிளர்ந்தெழும் போது சரித்திரசான்றுகளின் படி வேறு ஒரு கடவுளை அதாவது மதத்தை நாடுபவர்களாகவே இருக்கின்றார்கள். இதே போலத்தான் கிறிஸ்தவத்திற்கெதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் ரஸ்தபாரிசம் என்பதை மாற்றான மதமாக கொண்டார்கள். இது ஆன்மீக

www.tamilarangam.net



விலங்குகளில் இருந்து விடுதலைக்காகப் போராடும் மதம் என்று கருதினார். ஆனால் இம் மதம் மனிதனால் விளக்கமுடியாத தத்துவங்களான (mysticism) விந்தையான விளக்கங்களுக்கு புறம்பானதாக அவனைப் 'படைத்த' கடவுளுக்கும் உள்ள தொடர்பு, கடவுளின் பிரதிநிதிகளுடனான தொடர்பு போன்றவற்றையும் அடிப்படையாக கொண்டது. இவ்வடிப்படையில் கிறிஸ்தவ ஏகாதிபத்திய திணிப்பாளர்களுக்கெதிராக ஆபிரிக்க பழமை நடைமுறைகள், கடவுள்கள் என்பன மாற்றாகக் கொள்ளப்பட்டது. இவர்களுடன் நவகாலனிய தாசர்களான (Haile Selassie) ஹைலி செலசியின் மதக் கொள்கைகளும் இணைந்து கொண்டது. ரஸ்தாக்கள், ஜமேக்கர்கள் அனைவரும் வேதாகம நூலையே நம்பினார்கள்.

வர்க்க ரீதியான உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டவர்களது தொகை ஜமேக்காவில் அதிகளவில் உள்ளது. ஏனைய பல ஒடுக்கப்பட்ட நாடுகளில் சோஷலிச மக்கள் புரட்சி போன்றவற்றின் வளர்ச்சி ஏகாதிபத்தியத்தால் நிலை தடுமாறுவதால் சுரங்கத்தொழிலாளர் உல்லாசப் பயணத்துறை தொழிலாளர் அல்லது அரசு நிறுவன ஊழியர்கள் போன்றவர்களின் வாழ்க்கைத் தரம் "ஒப்பீட்டளவில்" மற்றையோரைவிட சிறிது "நன்நிலையில்" இருப்பதாலும், தேசிய பூர்சுவாக்கள் அரசியல் கட்சிகளும் இவர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருப்பதாலும், தொழிற்சங்கங்களைத் தங்கள் கீழ் வைத்திருப்பதாலும், ரஸ்தாக்களின் செல்வாக்கு நிலமற்ற கூலிகளாக நகரை நோக்கி வீசப்பட்டு இழப்பதற்கு இன் ஒன்றுமே இல்லை என்ற நிலையில் ~~~~~~ மூடநம்பிக்கைகளிலும் "பழைய" மூதாதையர் வாழ்வை வாழ நினைப்பவர்கள் மத்தியிலும் பெருகியது. தொழிலாளர்கள் தாங்கள் இவ்வாறு வாழ்வதற்கு ஏகாதிபத்தியம் தான் காரணம் என நினைத்த போதும் அந்த ஏகாதிபத்திய பூதத்தை விரட்ட இவ்வுலகிற்கப்பாற்பட்ட சக்தியின் துணை ஒன்று தேவை எனவும் கருதினர். இந்த மாறுபட்ட கருத்தச்சூழலின் அடிப்படையில் கிறிஸ்தவமதக் கோட்பாட்டை கேலி செய்து இப்பிரச்சனைக்கான தீர்வை முன்வைக்கும்

www.tamilarangam.net



பாடலொன்று ஜிம்மி கிளிவ் (Jimy Clif) என்பவரால் பாடப் பட்டது.

Well they Page(79) –

அவர்கள் கூறுகிறார்கள் வானத்தில் எனக்கொரு பரிசு காத்திருக்கிறதென்று.
நான் இறந்த பின்பு அதை அடைவேனென்று;
ஆனால் நான் பிறந்த நாளில் இருந்து இருக்கும் வரை
அவர்களுக்கு என் அழுகுரல் எட்டவில்லை
ஆகவே சூரிய உதயம் எவ்வளவு நிச்சயமோ
அதுபோல் நானும் எனது பங்கைப் பெறப் போராடுவேன்.
அப்போது அவர்கள் எவ்வாறு தீர்க்கமாக என்னை எதிர்க்கிறார்களோ
அவ்வளவு நிச்சயமாக அவர்கள் வீழ்வார்கள்.
ஒரு அடிமையாய் பொம்மையாய் வாழ்வதைவிட
ஒரு சுதந்திர மனிதனாய் கல்லறையில் இருப்பேன்.

ஜமேக்காவின் அரைவாசி ஜனத்தொகை ஒரு மில்லியன் மக்கள் பொப்மாலியின் இறுதியாத்திரையில் கலந்து கொண்டனர். சாகும் தறுவாயில் பொப்மாலிக்கு ஜமேக்காவின் அதி உயர்ந்த விருது அளிக்கப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல் ஜமேக்கா பிரதமர் சேகா (Sega) இந்த இறுதிச் சடங்குகளுக்கு தலைமை வகித்தான். அதேசமயம் சேகாவும் அவனது கட்சியினரும் பொப் மாலியை கொலை செய்ய முயற்சித்தனர் என்ற சந்தேகம் நிலவுகின்றது.

ஒரு கலைஞன் சர்வதேச வாய்ப்புகள் எய்தியும் அதேநேரத்தில் அரசாங்கத்திற்கு எதிரியாகவோ அல்லது விமர்சிப்பவனாகவோ இருந்தால் ஒரு பக்கத்தில் "தேசிய சொத்து" என ஏற்கும் நிலைக்கு தள்ளப்படுவதுடன், அவனை ஒழித்துக்கட்ட முடியாத நிலைக்கும் தள்ளப்படுகின்றனர். ஆனால் தங்களது கலை மூலம் எதிர்புணர்வுகளை மக்கள் மத்தியில் கலைஞர்கள் பரப்பிக் கொண்டே இருப்பார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு சங்கடமான நிலையையும் எதிர்மறையான விளைவுகளையும் அளிக்கக்கூடியதாக எப்போது ஒரு சந்தர்ப்பம்

www.tamilarangam.net



அமையுமென்றால், புரட்சிகர தலைமைசக்திகள் உலகெங்கும் சரியான உந்தலின்றித் திடக்கும்போது மக்கள் தங்கள் தலைமைக்காக வேறுதிசையில் திரும்புவார்கள், அநேகமான இச்சந்தர்பங்களில் அவர்களுக்கு கிடைப்பவர்கள் கலைஞர்கள்தான். ஏனெனில் ஆளும்வர்க்கம் சிலசமயங்களில் வெகு அவதானமாகவே கலைஞர்களுடன் நடந்துகொள்ள வேண்டிய நிலைக்குத்தள்ளப்படுகின்றனர். ஆனால் கலைஞர்கள் புரட்சிக்கு தலைமையேற்று நடத்தும் அளிற்கு வளராதவர்களாய் இருக்கின்றார்கள். கலைஞர்களாகவே இருந்து கொண்டு புரட்சிக்கு தலைமை ஏற்கமுடியாதவர்கள் புரட்சியை திசைதிருப்புவர்களாக செயல்படுகின்றனர். இவ்வேளையில்தான் உண்மையான புரட்சித்தலைமை உருவாகுவதற்கான தேவை வெளிப்பட்டு புதிய புரட்சித்தலைமை உருவாகின்றது. அத்தோடு மட்டுமல்லாமல் தங்களது கலையையும் இசைமூலம் கல்வி என்ற நிலைக்கு இழுத்துக்கொள்கின்றனர். மக்களுக்கு உண்மையான பிரச்சாரத்தை அளிக்கவேண்டும். போர்க்குணத்தை வளர்க்கவேண்டும் இசைகளுக்கு இசைக்குப் பதிலாக கருத்துரைகளை மாற்றாகப் பயன்படுத்தவேண்டும்.

எல்லாக்கலைகளுக்குமே அரசியல் அடிப்படையானது ஏனெனில் எல்லாக்கலைஞர்களும் மற்றெல்லோரும் போல் அரசியல் சார்புகள் இருக்கத்தான் செய்கின்றது. தேவைக்கமைய அரசியல் கருத்துக்கள் தங்கள் படைப்பில் வெளிக்கொண்டுவருவார்கள். கலை மனிதனின் வேறுபட்டவிதமான தேவையைப் பூர்த்தி செய்வதாக அமைகிறதேயன்றி அரசியல் கல்வியை பரப்புவதான அமைப்பை கொண்டதாக இல்லை. இசை அரசியல் கல்விக்கு ஒருவாயிலாக அமையுமென்ற விவாதம் சில பத்து வருடங்களாக விவாதிக்கப்பட்டுவருகின்றது. திரிபுவாதிகள் சிலரின் "கலைஞர்கள் அரசியல் அறிவூட்டுபவர்களாகவும் அரசியல் தலைவர்களாகவும் செயல்படுகின்றார்கள்" என்ற பிரச்சாரமும் இந்த விவாதத்தை மேலும் குழப்புவதாக அமைந்தது.

பொப்மாலி இப்பிரச்சனைபற்றி கருத்துத்தெரிவிக்கும்போது இப்பாடல்களை மக்கள் புரிந்து கொள்கிறார்கள் அல்லது புரிய முடியாதவர்களாய் இருக்கி

www.tamilarangam.net



றார்கள். ஆனால் நாங்கள் அவைகளைப் பாடிக் கொண்டுதான் இருப்போம் "மக்களுக்கு தேவையென்னவென்றால் அழகுதான்" (மாலி அழகென்று குறிப்பிடுவது இசையின் இனிமை அல்லது சொற்றொடர்களின் அழகு என்பவை)

ரெக்கே இசை தனது இனிமையால் அழகால் மக்களைக் கவர்ந்தது. ஆனால் ஜமெக்காவின் அரசியல் 70களில் போலி சோஷலிசவாதிகளாலோ அல்லது அமெரிக்க அடிவருடிகளாலோ ஆளப்பட்டது. இவ் இருசாராரும் ஜமெக்காவை ஒரு நவகாலனியாக்கி தங்களது "அரசியல்" ஆயுத பலத்தின் மூலமே தக்கவைத்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில் ஜமெக்கா மக்கள் ரெக்கே கலைஞர்களை தங்கள் அரசியல் பிரதிநிதிகளாக்கிக் கொண்டனர். அதுடன் மட்டுமல்லாது பொதுவான ரெக்கே கலைஞர்கள் ரஸ்தாரிகளாக இருந்ததால் ஆன்மீகத் தலைவர்களாய் ஆபிரிக்காவில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்களது ஜா (Jah) என்ற மதத்தின் பிரதிநிதிகளாய் கொள்ளப் பட்டனர்.

அவர்கள் எங்களை அடிமைகளாக
விலங்கிட்டு கவர்ந்து சென்றனர்.
எங்களிடம் ஒரு பாடலைக் கேட்கின்றார்கள்
நாங்கள் எவ்வாறு அரசன் அல்லாவின் பாடலை
ஒரு அந்நிய நாட்டில் பாடமுடியும்.

(Powers of Babylon)

பீற்றர் ரொஸ் இன் கருத்துப்படி "இசைக்கலைஞர்கள்தான் இக்காலத்தின் உண்மையான தீர்க்கதரிசிகள்". ஆனால் இந்நிலை சில மாறுபட்ட நிலைகளை உருவாக்குகின்றது. ஜமெக்கா மக்கள் ஆன்மீக, அரசியல் வழிகாட்டிகளாக கொண்ட இசைக்கலைஞர்களிடமிருந்து எவ்வளவோ எதிர்பார்த்தார்கள் ஆனால் இவர்கள் அவை ஒன்றையும் இவர்களுக்களிக்காது தங்கள் வாழ்விலும், இசையிலும் சில வரம்புகளை மீறி இவர்களால் செல்லமுடியாததுடன் மோசமான கலைப்படைப்புகளையும் உருவாக்கினார்கள்.

(மிகுதி அடுத்த இதழில்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# — உணர்வின் அகதி —

பகலின் நேசத்தில்
இரவின்
எல்லை ஆக்கிரமிப்பு

பனிக்காலம்.

வெண்பனியின்
குளிர்த் தாக்குதல்
கம்பளி ஆடைக்குள்
நாம்
குறுகிப் போவோம்.

வைகறையும் சாமமாய்
இறுத்துப் போயிருக்க
ஒரே அமைதி !
ஆலை நோக்கி விரைகிறேன்.
பனித் திரளுக்குள்
செருகுண்ட வீதிகள்
விறைத்துப் போக
வெளிறிய மஞ்சள் விழிகளுடன்
மின்கம்பங்களும்
அசையாது நிற்கும்.

நான் மட்டும் அசைவதுபோல்
எதும் நினைப்பிலும்கூட
அகதி என உணர்கிறேன்.

பாலமோகன்

www.tamilarangam.net

MANITHAM
POSTFACH . 12
3000 BERN . 11
SWITZERLAND

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்